பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

புதுமை : 02 | 30 செப்ரெம்பர் 2017 | விதி : 68



ஆட்டம் காணும் பொருளாதாரம்



ஆபத்தில் இருக்கும் அபூர்வம்



அணையாது எரியும் தியாகத் தீ



அனுமான் கற்றுத்தரும் பாடம்



# நீதி...!
## வழக்கும் தீர்ப்பும்

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# ஆட்டம் காணும் பொருளாதாரம்

அனுதினன்



அண்மைக் காலத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் நிலைப்பாடுகள் தொடர்பில் ஆய்வு செய்திருந்தால், உங்களுக்கு நிச்சயமாக ஏமாற்றமே மிஞ்சியிருக்கும். ஒட்டுமொத்தமாக இலங்கையின் பொருளாதார செயற்பாடுகள் கவலைக்குரியனவாகவே இருக்கின்றன. குறிப்பாக, 2015 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி என்பதற்கு பதில் வீழ்ச்சிப் பாதையில்தான் பயணித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாண்டின் முதலாம் காலாண்டில் மாத்திரமே பொருளாதார வளர்ச்சியானது 3.8 வீதமாக வளர்ச்சி கண்டிருக்கிறது. (இங்கு குறிப்பிடப் படும் பொருளாதார வளர்ச்சி என்பது, கடந்த ஆண்டுடன் அல்லது கடந்த காலாண்டுடன் ஒப்பிடுமிடத்து பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுள்ளதா? அல்லது அதே அளவு வளர்ச்சியை கொண்டுள்ளதா? என்பதையே குறிப்பிடுகிறது)

2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடுமிடத்து, 2017ம் ஆண்டின் முதலாம் காலாண்டு வளர்ச்சியானது ஒப்பீட்டளவில் குறைவானதாகும். இருந்தபோதிலும், நம்பிக்கையான முன்னெடுப்புக்கள் காரணமாக இரண்டாம் காலாண்டில் இந்தநிலையில் மாற்றம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் உற்பத்தித்துறை 6.3 வீதமாகவும், சேவைத்துறை 3.5 வீதமாகவும், விவசாயத்துறை 3.2 வீதமாகவும் வளர்ச்சி காட்டியுள்ளது. இலங்கையின் கட்டிட நிர்மாணத் துறை 2017ம் ஆண்டின் ஆரம்பத்திலும், அதனை தொடர்ந்து இரண்டாம் காலாண்டிலும் விரிவாக்கம் பெறுவதன் விளைவாக, இந்தநிலையில் நிச்சயமாக ஏறுமுகமான மாற்றத்தை அவதானிக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இருந்தாலும் இதிலும் ஒருசில சிக்கல்கள் உள்ளன. உதாரணமாக, இலங்கையில் தொடர்ச்சியாக நிலவும் வரட்சி நிலையும், மற்றொரு பக்கம் நிலவும் வெள்ள அனர்த்த நிலையும் குறிப்பிட்டளவில் விவசாயத் துறையை பாதிப்படையச் செய்யக்கூடும். இதுவரையான கணிப்பீடுகளின் பிரகாரம் குறைந்தது ஒட்டுமொத்த விவசாயத்துறையின் பங்களிப்பானது 40வீதத்தால் 2017 இல் குறைவடைந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, இது இரண்டாம் காலாண்டில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிக்கு தடையாக அமையக்கூடும் அல்லது ஒட்டுமொத்த வளர்ச்சியில் எதிர்பார்க்கபட்டதுக்கும் குறைவான வளர்ச்சி நிலைக்கே வழிகோலும்!

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பல்வேறு துறைகளும் பல்வேறு வகைகளில் துணையாக நிற்கின்றன. அந்தவகையில், இவ்வாண்டு பொருளாதார வளர்ச்சியானது எதிர்பார்த்த அளவினை எட்டாது போனால், தனித்து விவசாயத்துறையை மாத்திரம் குறை சொல்ல முடியாது. காரணம், விவசாயத் துறையின் பங்களிப்பானது அண்மைய காலங்களில் குறைவாகவே இருந்திருக்கிறது. குறிப்பாக, அதிலும் 2016 இல் விவசாயத்துறையின் பங்களிப்பு 10 வீதத்துக்கும் குறைவாக 7.1 வீதமாகவே இருந்திருக்கிறது. எனவே, தனித்து விவசாயத்துறையில் மாத்திரம் பழி சுமத்தி விடமுடியாது.

பொருளாதார மந்த நிலைக்கு மற்றுமொரு முக்கிய காரணமாக, உற்பத்தித்துறையில் போதுமான செயற்றிறனின்மையும் குறிப்பிட முடியும். குறிப்பாக, இலங்கையின் உற்பத்தி துறையின் உப பிரிவான கட்டுமானத்துறையில் அபரீதமான வளர்ச்சியை கண்கூடாக காணக்கூடியதாக இருக்கிறது. இதன்விளைவாக, பொருளாதார வளர்ச்சியோ அல்லது உற்பத்திதுறையில் மேம்பாடு ஏற்படுவது போலவோ தோற்றப்பாடு ஏற்பட்டிருக்கலாம். ஆனால், உண்மையில் கட்டுமானத்துறையின் தேவைகளுக்கு ஏற்ப ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இடம்பெறும் சமயத்தில் மாத்திரமே பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதாக இருக்க முடியும். ஆனால், இலங்கையின் கட்டுமானத்தை பொறுத்தவரையில், ஒப்பீட்டளவில் வெளியீட்டை விட இறக்குமதி அளவு அதிகமானதாக இருக்கிறது. எனவே, எதிர்பார்த்த அதிகரிப்பை இதன் மூலமாக பெற்றுக்கொள்ள முடியாதநிலை தற்போது காணப்படுகிறது. எனவேதான், இலங்கையின் பிரதான உற்பத்தி செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள பின்தங்கிய நிலையானது, உற்பத்திதுறையின் வீழ்ச்சிக்கும், பொருளாதார மந்தநிலைக்கும் வழிவகுத்துள்ளது.

மேற்கூறிய காரணிகளின் அடிப்படையில், இலங்கையின் 2017 ஆம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சியானது எதிர்பார்த்த அளவுமட்டத்தை அடைவது கேள்விக்குரியதாகவே உள்ளது. குறிப்பாக, இலங்கையில் நிலவும் பாதகமான காலநிலை இதில் ஒரு காரணியாக அமைந்தாலும், அதனைவிடவும் நிறையவே காரணிகள் பொருளாதார மந்தநிலைக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. குறிப்பாக, பொருளாதார கொள்கைகளில் காணப்படும் தளம்பல் நிலைமை, அரசியல் ஸ்திரமற்றதன்மை, நிர்வாக குழப்பநிலைமை , நிதி நிர்வாக ஊழல் மோசடிகள் என்பனவும் இதற்க்கு பிரதான காரணங்களாக அமைந்துள்ளது. இவைதவிரவும், ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி , மற்றுறம் வெளிநாட்டு நாணயங்களின் உள்வருகையில் ஏற்பட்ட தளம்பல்நிலைமை போன்றனவும் இதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார உயர்ச்சியானது சிலகாலங்களுக்கு பிறகு புத்துயிர் பெற்ற சுற்றுலாத்துறையை சுற்றியதாகவே இருக்கிறது. உலகளாவிய ரீதியில் இலங்கைக்கு சமனான அல்லது மேம்பட்ட சுற்றுலா போட்டியாளர்கள் அதிரித்துவரும் நிலையில், தொடர்ந்தும் இலங்கை சுற்றுலாத்துறை வருமானங்களை மாத்திரமே நம்பியிருப்பது கவலைக்குரியதாகும். இந்த சமயத்தில், சேவைத்துறைக்கு ஏற்றால்போல உற்பத்திதுறையும், ஏற்றுமதிகளையும் வளர்த்தெடுக்கவேண்டியது அவசியமாகிறது.

ஏற்றுமதிகளை பொறுத்தவரையில் மந்தகரமான சூழ்நிலையை கடந்தகாலங்களில் எதிர்நோக்கியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் கிடைக்கப்பெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் சலுகையானது மிகப்பாரிய ஊக்குவிப்பு காரணியாக அமைந்துள்ளது. இந்த ஊக்குவிப்புடன், ஏற்றுமதிகளை அதிகரித்து அதனூடாக, சென்மதி நிலுவையில் சாதக அதிகரிப்பினை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். இல்லையெனில், இலங்கை தனது சென்மதி படுகடன் நிலையை ஈடுசெய்ய மேலும் மேலும் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையே உருவாகும்.

இலங்கைய ஏற்றுமதி தரவுகளை நோக்கும்போது, 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்றுமதியானது 3.5 வீதமாக உள்ளது. இந்த ஏற்றுமதியில் மிகப்பெரும் பங்கினை தேயிலை ஏற்றுமதியும், அதற்க்கடுத்ததாக வாசனைத் திரவியங்கள் , இயந்திர உபகரண ஏற்றுமதி, பெற்றோலிய பொருட்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் ஏற்றுமதியும் கொண்டுள்ளது. அதுபோல கடந்தகாலங்களில் ஏற்றுமதியில் வருமானத்தை ஈட்டித்தந்த ஆடை உற்பத்தி , நகைகள் மற்றும் புகையிலை பொருட்கள் என்பனவற்றின் வருமானத்தில் வீழ்ச்சியையும் காணக்கூடியதாக உள்ளது.

( 18 ஆம் பக்கம் பார்க்க)





# நீதி...! வழக்கும் தீர்ப்பும்

இரண்டரை வருடங்களாக இழுபட்ட வித்தியா வழக்கு ஒருவாறு கடந்த 27 ஆம் திகதியோடு முடிவுக்கு வந்திருக்கிறது. காசிலிங்க சர்மாவைக் கொன்ற கோகிலாம்பாள் வழக்கு, இராணுவத்தால் வன்புணர்ந்து கொல்லப்பட்ட கிருஷாந்தி கொலை வழக்கு என்பவற்றுக்கு அடுத்ததாக முழு இலங்கையையும் உற்றுப் பார்க்க வைத்த வழக்குகளின் வரிசையில் வித்தியா வழக்கும் சேர்ந்து கொண்டது. இந்த வழக்கின் ஒவ்வொரு விசாரணை அமர்வையும் அக்குவேறு ஆணிவேறாக ஊடகங்களைப் பார்த்து அறிந்து கொள்ள ஒட்டுமொத்த இலங்கையர்களும் ஆர்வம் காட்டினார்கள். அதனால்தான் வழக்கின் தீர்ப்பு வாசிக்கப்பட்டதும் பட்டாசு வெடித்துக் கொண்டாடுமளவுக்கு பலரும் சென்றிருந்தார்கள்.

இதற்கு முக்கிய காரணம் வித்தியா வழக்கை , பெரும்பாலானோர் - குறிப்பாக வடக்கு மக்கள் - தமது சொந்த வழக்காகவே நினைத்தார்கள். தங்கள் வீட்டுப் பெண்ணொருத்திக்கு நேர்ந்த அநீதிக்கு எப்படியாவது நியாயம் கிடைத்துவிட வேண்டும் என்பதே அவர்களின் பிரார்த்தனையாக இருந்தது. பொதுவாகவே யாழ்ப்பாணத்தவர்களிடம் இருப்பதாகச் சொல்லப்படும் விடுப்புப் பார்க்கும் குணத்தையும் தாண்டி, தங்கள் சொந்தப் பிள்ளைக்கு நிகழ்ந்த கொடுமைக்கு நீதி வேண்டும் பழக்கமும் தங்களுக்கு இருப்பதை யாழ்ப்பாணத்தவர்கள் நிரூபிப்பதற்கும் வித்தியா வழக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கிறது.

தம்மைச் சுற்றி நடப்பவற்றையெல்லாம் கண்டும் காணாதது போல, தங்கள் வேலைகளில் மட்டும் கருத்தாக இருப்பவர்கள் கூட, வித்தியாவுக்கு நீதி கேட்டு வீதியில் இறங்கிப் போராடினார்கள். இந்தப் போராட்டங்களின் பின்னணியில் எந்தவொரு தூண்டல் சக்தியும் இருக்கவில்லை. அவரவர்களின் உள்ளுணர்வுகளே தூண்டலாக இருந்தன. மக்களின் இந்தத் தன்னெழுச்சியான போராட்டங்களே ஜனாதிபதி மைத்திரியை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து , "ட்ரயல் அட் பார் முறையில் விசாரணை நடத்தி , வித்தியாவின் சாவுக்கு நீதி விரைந்து வழங்கப்படும்" என்று உறுதிமொழி கொடுக்க வைத்தது.

ஆனாலும் வழக்கம் போல வாக்குறுதியோடு நாட்டின் தலைவர் வித்தியாவை மறந்துவிட்டார். சாதாரண வழக்குகள் போலவே இந்த வழக்கும் , வழக்கமான நீதிமன்ற நடைமுறைகளின்படியே மெதுவாக நகர்ந்து, சுமார் 2 வருடங்களின் பின்னரே 'மூன்று நீதிபதிகளைக் கொண்ட தீர்ப்பாயம் நிறுவப்பட்டது. அதன் பின்னர் தான் , ஆமை வேகத்தில் நகர்ந்த வித்தியா வழக்கு முயல் வேகம் எடுத்தது. சாட்சிகள் துரிதமாக நெறிப்படுத்தப்பட்டு, ஆதாரங்கள் ஆராயப்பட்டு , இப்போது 7 பேருக்கு தூக்குத்தண்டனை மற்றும் 30 வருட சிறைத் தண்டனை, அபராதம், வித்தியா குடும்பத்துக்கு 7 மில்லியன் ரூபா நஷ்டஈடு என தீர்ப்பு வாசிக்கப்பட்டு, குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டவர்கள் கண்டி போஹம்பர சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டும் விட்டனர். சந்தேக நபர்களில் இருவருக்கு எதிரான சாட்சியங்களோ, ஆதாரங்களோ இல்லாதமையால் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் விடுவிக்கப்பட்ட மறுநொடியே நீதிமன்ற வாசலில் வைத்து, முன்னைய மிரட்டல் குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்பட்டு, மீண்டும் சிறைவாசியாகியிருக்கிறார். என்னதான் 7 பேருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியிருந்தாலும் கூட , மக்களுக்கு இந்தத் தீர்ப்பு முழுத் திருப்தியைத் அளிக்கவில்லை என்பதே உண்மை. இரண்டரை வருடக் காத்திருப்பில் மக்கள் சில விடயங்களை எதிர்பார்த்திருந்தனர். குறிப்பாக வித்தியாவின் கொலைக்குப் பின்னர் நடந்த தகிடுதத்தங்கள் தொடர்பில் தீர்ப்பாயம் மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பது அவற்றில் ஒன்று. இந்த வழக்கின் சூத்திரதாரியாகச் சுட்டப்படும் சுவிஸ்குமாரைக் காப்பாற்ற சட்டத்தரணி தமிழ்மாறன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க, பொலிஸ் பொறுப்பதிகாரி சிறி கஜன் போன்றோர் காப்பாற்ற முயன்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இதில் பொலிஸ் தரப்பைச் சேர்ந்த இருவருக்கு எதிராகவும் பலமான ஆதாரங்கள் கிடைத்தும் இருந்தன.

இவர்கள் மீது விசாரணையின் நிழல் விழத் தொடங்கிய சிறிது நாளில், பொலிஸ் பொறுப்பதிகாரியான சிறிகஜன் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வழியாக , பொலிஸ் திணைக்களத்துக்குத் தெரியாமல் தப்பிச் செல்ல முயன்றார். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் அவரைப் பொலிஸார் ஏதோ ஒரு சக்தியின் தடுப்பின் பேரில் கஜனைக் கைது செய்யவில்லை. யாழ்ப்பாணத்தின் கஜன் மிகவும் அறியப்பட்ட ஒரு பொலிஸ் அதிகாரி.

'சிங்கம் 2' என்பது கஜனைக் குறிக்கும் பட்டப்பெயர். அந்தப் பெயரால் தான் யாழ்ப்பாணத்து இளைஞர்கள் கஜனை அழைப்பார்கள்.

சந்தேகநபர்கள் மீது ஈவிரக்கமின்றி , சாம, தான , பேத , தண்ட முறைகளைப் பயன்படுத்துவதில் கஜன் கில்லாடி. மிகக் கடுமையான பொலிஸ் அதிகாரியாக அறியப்பட்டிருந்த கஜன், நகைக் கொள்ளையர்களிடம் பங்கு கேட்ட விவகாரத்தில் தொடர்புடையவராக பேசப்பட்டிருந்தார். அதன் பின்னர் சுவிஸ்குமாரிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு அவரைத் தப்பிக்க உதவ முயன்றதாக ஆதாரங்களோடு வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும், கட்டுநாயக்கா வழியாக அவர் தப்பியோட முனைகையில் பொலிஸார் கைது செய்யவில்லை. ஆனால் அடுத்த சில தினங்களிலேயே கஜன் தலைமறைவாகி விட்டார். அவருக்கு என்ன நடந்தது, எங்கு இருக்கிறார் என்பது குறித்து எதுவும் தெரியவில்லை.

சட்டத்தரணி தமிழ்மாறனும் சுவிஸ்குமார் விடயத்தில் அதிக ஈடுபாடு காட்டியவர்களில் ஒருவர். இதனால் புங்குடுதீவில் அவரது காரை வழிமறித்து, தாக்குதல் நடத்தவும் மக்கள் முயன்றனர். ஆனால் அவர் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே கதைதான் இராஜங்க அமைச்சர் விஜயகலாவுக்கும். இருப்பினும் தீர்ப்பில் அவர் கண்டிக்கப்பட்டிருக்கிறார்.

இலங்கையையே உலுக்கிய ஒரு மிகப்பெரும் கொடூரத்தைப் புரிந்தவரைக் காப்பாற்றவும், தப்ப வைக்கவும் முயன்றவர்களே உண்மையில் குற்றவாளிகளை விடவும் மிக ஆபத்தானவர்கள். ஏனெனில் இவர்களைப் போன்றவர்களால்தான் தாமும் தப்பிக்கலாம் என்ற நினைப்பில் இன்னும் பல குற்றவாளிகள் உருவாகலாம். குற்றவாளிகள் ஒன்பது கோள்கள் எனில் இவர்கள் சூரியன்கள். இந்தச் சூரியன்களின் சக்தி கொடுக்கும் தைரியத்தில் தான் குற்றக் கோள்கள் தோற்றம் பெறுகின்றன. இனிமேலும் குற்றக் கோள்கள் உருவாகாதிருக்க வேண்டுமெனில், இந்த பின்னணிச் சூரியன்களும் தண்டிக்கப்படவேண்டும். இவர்கள் பற்றிய வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நிலுவையில் இருக்கிறது. 7 பேரின் தூக்குத் தண்டனைத் தீர்ப்போடும், அவர்களின் மேன்முறையீட்டு வழக்கோடும் எமது கவனத்தைக் குறுக்கிக் கொண்டால், நிலுவையில் உள்ள பின்னணிச் சூத்திரதாரிகளின் வழக்கு ஆறிய வழக்காகி, பழங்கஞ்சியுமாகி விடும். எனவே நேரடிக் குற்றவாளிகள் மட்டுமல்லாது மறைமுகக் குற்றவாளிகளும் நீதியின் முன் தண்டிக்கப்பட்டாலே வித்தியாவின் ஆன்மா கொஞ்சமேனும் நிம்மதி பெறும்.

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

1



## தீர்ப்பும் மகிழ்வும்

இலங்கையர்கள் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட மாணவி வித்தியா கொலை வழக்கு தீர்ப்பு கடந்த வாரம் வழங்கப்பட்டது. குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட அனைவருக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டமையை அனைவரும் கொண்டாடி வருகிறார்கள்.

சமூகவலைத்தளங்களில் தீர்ப்பு வழங்கப்பட்ட தினத்தன்று படங்கள், வீடியோக்கள், வித்தியாவின் தாயார் கண்ணீரால் மக்களுக்கு நன்றி சொல்லும் வீடியோ, வழக்கறிஞர்களின் பிரத்தியேகப் பேட்டிகள் என நிறைந்தன.

சுவிஸ்குமாரை காப்பாற்ற முயன்ற விஜயகலா எம்.பிக்கு ஏன் தண்டனை வழங்கவில்லை என்ற கேள்விகளும் எழுந்திருந்தமையையும் காண முடிந்தது.

2



## அணையாத தீ

தியாகதீபம் திலீபனின் 30 ஆவது நினைவுதினம் நல்லூரில் அனுஷ்டிக்கப்பட்டது. தன்னெழுச்சியாகக் கூடிய இந்த நிகழ்வு சமூகவலைத்தளங்களில் நேரடியாக ஒளிபரப்பாகி வைரலானது.

திலீபனுக்காக முன்னாள் போராளி தூக்குக் காவடி எடுத்த சம்பவமும் மக்களை நெருடச் செய்திருந்தது.

உணர்வெழுச்சியுடன் நடந்த இந்த நிகழ்வுகள் குறித்து சக்தி தொலைக்காட்சி கண்டு கொள்ளவில்லை என்றும் சிலர் தங்கள் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியை சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளை உரையாற்ற அனுமதிக்காதது தொடர்பிலும் சமூகவலைத்தளங்களில் கருத்து முரண்பாடுகள் வலுத்திருந்தன.

3



## நினைவு சோகம்

1995 இல் நாகர்கோவிலில் விமானப் படையினரன் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 21 மாணவர்களின் நினைவுகூரல் குறித்தும் அதிகம்பேரால் பேசப்பட்டது.

நாகர் கோவில் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நினைவுதினம் குறித்த செய்திகள், படங்களுடன், அஞ்சலிகளும் சமூகவலைத்தளங்களில் நிறைந்திருந்தன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வில் அரசியல் தலைவர்களை காண முடியவில்லை என்ற விமர்சனங்களும் ஆங்காங்கே உலவின.



ஆபரேஷனப்ப டாக்டருக்கு நர்ஸ் உதவியா இருப்பாங்க, நர்ஸுக்கு யார் உதவுவாங்க சொல்லுங்க?

தெரியலையே!!!

முருகக் கடவுள்தான்!

#படித்ததில் பிடித்தது

கடவுள் சரி அது எப்புடி முருகக் கடவுள்னு ஸ்பெஸிஃபிக்காச் சொல்லுறீங்க?

கந்த சஷ்டிக் கவசத்துலேயே வருது பாருங்க, "சிஸ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்"ன்னு!

ஹாஹாஹா!

எங்கடா இருக்க...?

நடுத்தெருவுல நிக்கறேன் வந்து கூட்டிட்டு போ...




யாரோ f/alwzsmle

வேறு என்ன கேட்டுவிட போகிறேன் வாழ்கையிடம்..?



இவ்வளவு தாங்க..

இப்பலாம் யாரும் நல்லநேரம் பாத்து வெளிய கிளம்புறதில்லை...



f/alwzsmle யாரோ

மொபைல் பேட்டரில புல் சார்ஜ் ஆனபிறகுத்தான் வெளியேறுறாங்க..

வேலைக்கு போக வேண்டிய வாரநாட்கள் எல்லாம் எட்டுமணி வரை தூக்கம் வருது...



ஆனா லீவ் நாள்ல காலைல சூரியன் உதிக்கிறதுக்கு முன்னாடியே முழிப்பு வருது...

காதலித்து பார்..
தரையில கால் நிக்காது....
போன்ல சர்ஜ் நிக்காது....
பர்ஸ்ல காசு நிக்காது...



f/alwzsmle யாரோ

ஆனா நீ மட்டும் நடு தெருவுல நிப்ப...

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## தூரத்தே முளைக்கும் விடிவெள்ளி

ஈராக்கில் இருந்து தனித்துச் செல்லும் முடிவை ஆதரித்து 92 வீதமான குர்திஷ் இன மக்கள். ஈழத் தமிழர்களைப் போன்றே குர்திஷ்தான் மக்களும் இன ஒடுக்குமுறை - மொழி, மதப் புறக்கணிப்பு - கலாசார மறுப்பு- தாயகம் ஆக்கிரமிப்பு - சமூக ஒதுக்கல் - வரலாறு மறைப்பு, அழிப்பு போன்றவற்றுக்கு முகம் கொடுத்து, அகிம்சை, ஆயுத வழி போராட்டம் நோக்கித் தள்ளப்பட்டவர்கள். ஈராக் அரசால் மட்டுமின்றி ஈரான் - சிரியா - துருக்கி அரசுகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட போர்களில் சிக்கி ஈழத்தமிழர்கள் சந்தித்தது போன்றே படுகொலைகள் - பாலியல் வன்புணர்வுகள் - இடப் பெயர்வு அவலங்கள் - உறவுகளின் இழப்பு, பிரிவு - அச்சுறுத்தல்கள் - மனித உரிமைகள் மீறல் - என அனைத்து வகையான வலிகள் - துன்ப - துயரங்களையும் சுமந்தவர்கள் இந்த மக்கள்.

மத்திய கிழக்கில் நான்காவது பெரிய மக்கள் தொகை கொண்ட மரபு இனம் குர்திஷ். ஆனால் அவர்களுக்கு என நிரந்தரமான தேசிய அரசு இல்லை. கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலேயே அரேபியர்களின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு, குர்திஷ் மக்களின் மதம், மொழி உரிமைகள் மறுக்கப்பட்டன. பின்னாளில் பிரான்ஸ், பிரித்தானியர்களின் அடக்கு முறைகளாலும் பெரும் அவலங்களை சந்தித்தது. ஐரோப்பியர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றதும் ஈராக், சிரியா, துருக்கி நாடுகள் குர்திஷ் மக்களின் பாரம்பரியத் தாயகத்தை கூறுபோட்டுக் கொண்டன. தங்கள் சுதந்திரத்துக்காகப் போராட்ட வடிவங்களை எல்லாம் ஒன்றிணைத்து போராடினார்கள் குர்திஷ்தான் மக்கள். கேட்டதும் தூக்கிக் கொடுத்துவிட சுதந்திரம் என்ன சுண்டங்காயா? தூக்கிக் கொடுத்துவிட.

சுமார் நூற்றாண்டுகால நீண்ட சுதந்திரப் போராட்டம் - கடந்து வந்த இந்த 100 வருட சுதந்திரப் போரில்தான் எத்தனை எத்தனை அழிவுகள் - இழப்புகள் - துரோகங்கள் -- ஏமாற்றங்கள் - வலிகள். எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு சுதந்திர வேட்கையுடன் பயணித்தார்கள் குர்திஷ் மக்கள். சுதந்திரம் கேட்டுப் போராடியவர்களின் பாரம்பரிய பிரதேசமான கிர்குக்கின் எண்ணெய் உரிமையை அப்போதைய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தனக்கு தருமாறு கேட்டார். மறுத்தார்கள் குர்திஷ்கள். விளைவு இரு தரப்பினருக்கும் இடையே மோதல் வெடித்தது. ஒரு இலட்சத்து எண்பதாயிரத்துக்கும் மேற்பட்ட குர்திஷ் மக்கள் கொல்லப்பட்டார்கள். இலட்சக்கணக்கானவர்கள் காயமடைந்தனர், இடம்பெயர்ந்தனர்.

சதாம் ஹுசைன் ஆட்சியில் இருந்து அகற்றப்பட குர்திஷ் மக்களும் உதவினர். ஆனால் உதவியைப் பெற்றவர்கள் அது முடிந்ததும் குர்திஷ் மக்களுக்கு வழங்கிய உறுதியை மறந்து விட்டனர். மீண்டும் போராட்டத்துக்குத் தள்ளப்பட்டனர் குர்திஷ் இன மக்கள்.
இந்த நிலையில் சுயாட்சி கேட்டுப் போராடிய குர்திஷ்கள் மீது ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பார்வை வீழ்ந்தது. தங்களின் இஸ்லாமிய தனிநாடு கனவை அடையும் வழியின் மிக் முக்கியமான நிலமாக குர்திஸ்தானை அவர்கள் பார்த்தார்கள். உரிமைக்காகப் போராடிய மக்கள் தங்களை பிறரிடம் அடகு வைத்துவிடுவார்களா என்ன? பெண்களும் கைகளில் ஆயுதங்களை எடுத்தனர். விளைவு எதிரிகள் துரத்தப்பட்டனர். தனிநாட்டுக் கோரிக்கை வலுப்பட்டது. பிரிந்து போக பொது வாக்கெடுப்பு நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. வாக்கெடுப்பு நடந்து இன்று பிரிந்து போகும் தங்கள் சுய விருப்புக்கு வாக்கிட்டு தங்களின் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் குர்திஷ்கள்.

குர்திஷ்கள் கடந்து வந்த போராட்டப் பாதை இலேசானதல்ல. எம்மைப் போன்று நீண்ட - நெடிய போராட்டப் பயணத்தில் பல துன்பங்களை சந்தித்தவர்கள். நூறாண்டு கால விடுதலைப் போராட்ட வரலாற்றை அவர்கள் கொண்டிருந்தாலும் பல விடயங்களில் அவர்கள் பின்பற்றிய முன்மாதிரி யார் தெரியுமா...? வேறு யாருமல்ல ஈழத் தமிழர்களாகிய நாம்தான். ஆம்... ஈழத் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடிய விடுதலைப் புலிகள் அமைப்பும் - அதன் தலைவர் வே.பிரபாகரனும்தான் அவர்களின் முன்மாதிரிகள் - ரோல் மொடல். தோல்வி மனப்பான்மையில் குறுகிப் போய் - துரோகங்களும் - ஏமாற்றங்களுமே இன்று எம்மை சூழ்ந்து நிற்கின்றன. ஆனாலும் இன்று தூரத்தே முளைத்துள்ள விடிவெள்ளியை முன்மாதிரியாகக் கொண்டு - நம்பிக்கையுடன் நடப்போம் நமக்கான விடுதலைப் பாதையில்...

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# வித்யா கொலை வழக்கு நீதிமன்றில் நடந்தது என்ன?

எல்லோராலும் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட வித்யா கொலை வழக்குத் தீர்ப்பு நேற்ற அறிவிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 9பேரில் குற்றம் நிரூபிக்கப்படாத இருவர் விடுவிக்கப் பட்டுள்ளனர். குற்றவாளிகளாக காணப்பட்ட 7 பேருக்கும் மரண தண்டனையும், 30 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வித்யா குடும்பத்திற்கு நட்ட ஈடாகவும் ஆளுக்கு 10 இலட்சம் ரூபா வீதம் வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

அதே சமயம் இந்தத் தீர்ப்பின் பின்னர் 'குற்றவாளிகளைத் தப்பிக்கவிட்டுவிட்டு நிரபராதிகளாகிய எங்களைத் தண்டித்து விட்டீர்கள்' என சுவிஸ்குமார் தீர்ப்பாயத்திடம் தெரிவித்திருக்கிறான். இந்தத் தீர்ப்பினூடாக இறந்த எனது மகள் ஒருபோதும் வரப்போவதில்லை. ஆனாலும் இனிமேல் இப்படி ஒரு சம்பவம் நடைபெறக் கூடாது என்பதற்கு இந்தத் தீர்ப்பு ஒரு பாடமாக இருக்கும் என்று வித்யாவின் தாயார் சிவலோகநாதன் சரஸ்வதி தெரிவித்திருக்கிறார்.

இலங்கை முழுவதுவும் பரபரப்பை ஏற்படுத்திய இக்கொலை வழக்கு கடந்த இரண்டு வருடங்களாக ஊர்காவற்றுறை நீதவான் மன்றில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டு வந்தது. அதே சமயம் ஒரு முறை யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வமாக வந்திருந்த ஜனாதிபதி, வித்யா குடும்பத்திற்கு சிறப்பு நீதிமன்றினூடாக நீதிபெற்றுத் தரும் என்று வாக்குறுதி வழங்கியிருந்தார்.

இதன்படி கடந்த மே மாதப்பகுதியில் நீதாய முறையில் தொடங்கிய விசாரணை கடந்த 13ஆம் திகதி எதிரி தரப்புத் தொகுப்புரைகளுடன் பூர்த்தியடைந்து 27 ஆம் திக்தி தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

வழக்குத் தொடுனர் தரப்பில் பிரதி சொலிஸ்டர் ஜெனரல் குமார் ரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகளான நாகரத்தினம் நிஷாந் மற்றும் சட்டத்தரணி மாதினி விக்கினேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகினர். எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான மஹிந்த ஜெயவர்த்தன, ஆறுமுகம் அரகுபதி, சின்னராசா கேதீஸ்வரன் மற்றும் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்கினேஸ்வரன் ஜெயந்தா ஆகியோர் முன்னிலையாகினர். பாதிக்கப் பட்டவர்கள் நலன் காக்கும் பொருட்டு சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன் மற்றும் ரஞ்சித் குமார் ஆகியோர் தோன்றினர். தீர்ப்பு நாளன்று தீர்ப்பாயத் தின் தலைமை நீதிபதி 132 பக்கங்கள் கொண்ட தனது தீர்ப்பை வாசித்தார். எதிரிகள்மீது 41 குற்றச்சாட்டுகள் சுமத்-தப்பட்டிருந்தன. 53 சாட்சியங்களுடன் 27 வரையிலான சான்றுப் பொருட்களும் முன்னிலைப்படுத்தப்பட்டன. இந்த வழக்கில் கூட்டு வன்புணர்வு, பொலை, கடத்தல், சதித்திட்டம் தீட்டியமை, உடந்தையாக இருந்தமைக்காகக் குற்றங்கள் சாட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டு முதலாம் மற்றும் எட்டாம் எதிரிகள் தவிர மற்றையோர் அனைவரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

தீர்பாயத்தின் நீதிபதிகளில் ஒருவரான மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தனது தீர்ப்பை 345 பக்கங்களில் எழுதி வாசித்தார். அவர் பல பழைய வளக்குகளையும் அதன் தீர்ப்புகளை யும் சுட்டிக் காட்டித் தனது தீர்ப்பை எழுதியிருந்தார். மரபணு பரிசோதனை அறிக்கையை சிரேஷ்ட விஞ்ஞானியான ரூவான் இளையப் பெருமா மேற்கோள் காட்டிச் சாட்சியமளித்திருந்தார்.

எதிரிகள் சம்பவ தினத்தன்று மாலை வானில் கொழும்புக்குச் சென்று சிசிரீவி கமெராக்கள் உள்ள இடத்தில் நடமாடித் தாங்கள் கொழும்பில் நின்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாகச் சதித்திட்டம் தீட்டியுள்ளனரெனக் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் சம்பவ தினத்திற்கு முதல் நாள் கொழும்பில் நின்றதங்கு எவ்வித சாட்சியும் இல்லை என அறியப்பட்டது. எனினும் 17ஆம் திகதி ஊருக்குத் திரும்பி வந்து நடமாடியபோதே 4,5,6,7,8 ஆம் எதிரிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அன்றைய தினம் இரவே சுவிஸ் குமார் மக்களால் பிடித்து மின்கம்பத்தில் கட்டப் பட்டார். அன்றைய தினம் இரவு 11மணியளவில் அங்கு சென்ற விஜயகலா மகேஸ்வரன் சுவிஸ் குமா-ரைக் காப்பாற்றியுள்ளார். காப்பாற்றியவர் அவரைப் பார்த்து முதலில் கேட்ட கேள்வி நீ சசியின் அண்ணாவா? அந்த சசி யார் எனில் அன்று மாலை 3 மணிக்கு பொலிஸா ரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருந்த நபர். சுவிஸ் குமாரை அடிக்க வேண்டாம் என்று காப்பாற்றிய விஜயகலா இரண்டு மணித்தியாலங்கள் வரை அங்கு நின்று சுவிஸ்குமாரைப் பாதுகாப்பாக ஒப்படைத்து விட்டே சென்றார் என மக்கள் கூறியிருந்தனர்.

அதன் பின்பு அங்கு வந்த சட்ட பீடாதிபதி தமிழ் மாறன் மற்றும் பொலிஸ் உப பரிசோதகர் ஸ்ரீ கஜனிடம் சுவிஸ் குமார் சரணைந்துள் ளார். அவர்கள் அவரை யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத் திருந்தும் பொலிஸ் அதிகாரிகளின் துணையுடன் விடுவிக்கப்பட்டுள் ளார். பின்பு மக்கள் போராட்டத்திற்கு முகம் கொடுக்க முடியாது சுவிஸ் குமார் மீண்டும் வெள்ளவத்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவ்வாறு கைது செய்யப்பட்ட சுவிஸ் குமாரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு அப்பொதைய ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குயிண்டஸ் பெரேராவுக்குப் பொலிஸ் அத்தியட்சகர் கூறியபோதும் அவர் அதனைச் செய்யவில்லை என்பதை தீர்ப்பாயத்-தில் வெளிப்படையாகச் சொன்னார்.

( 18 ஆம் பக்கம் பார்க்க)



-அகரன் -

# திலீபன்

## அணையாது எரியும் தியாகத் தீ

கடந்த 26 ஆம் திக்தி காலை, நல்லூர் கோவில் சுற்றுவட்டாரத்தில் மக்கள் கூடத் தொடங்கினர். மண்ணுக்காய் தன்னை உருக்கி வித்திட்ட மாவீரன் நினைவேந்தலில் கலந்துகொள்ள அதிகாலையிலேயே மக்கள் வரத் தொடங்கியிருந்தனர். நீண்ட காலத்திற்குப் பின் நடைபெற்ற ஒரு எழுச்சிமிக்க நிகழ்வாகத்தான் அதைப் பார்க்க முடிகிறது. தான் வாழ்ந்தபோது மக்கள் மீது அவன் கொண்ட பற்றையும் , அக்கறையையும் மீள் நினைவுபடுத்து கின்ற வகையில் பலர் தமது அஞ்சலியைச் செலுத்த வந்திருந்தனர். அவன் தியாகம் மக்கள் மனதில் இன்னும் பசுமை நினைவுகளாக இருப்பதையே இந்த எழுச்சி நிகழ்வு சுட்டி நிற்கின்றது. ஒரு தியாகத்திற்கு மக்கள் கொடுக்கின்ற மானசீக அடையாளம் இதுவாகத்தானிருக் கும் என்பது எனது கருத்து. முப்பது வருடங்கள் என்பது ஒரு சாதாரண இடைவெளி இல்லை.

காலை 10.15 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் திலீபனின் தூபி அமைந்திருந்த இடத்தில் ஆயிரக்காணக்கான மக்கள் கூடி இருந்தனர். அஞ்சலியின் ஆரம்ப நிகழ்விற்காக திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடமான கோவிலின் வடக்குப் பக்கத்திற்குச் சென்றனர். அங்கு திலீபனுக்கு ஆரம்ப அஞ்சலியைச் செலுத்திவிட்டு பின்னர் அங்கிருந்து காலை 10.30 மணியள வில் மீண்டும் திலீபனின் தூபி அமைந்திருந்த இடத்திற்கு வந்தனர். அஞ்சலி நிகழ்வு ஆரம்பமானது.

'பாடும் பறவைகள் வாருங்கள் புலி வீரன் திலீபனைப் பாடுங்கள்" என்ற பாடல் ஒலிக்கத் தொடங்கியது. அங்கு கூடியிருந்த எல்லோரிடத்தி லும் உணர்ச்சி மிடுக்குடனானதொரு சோகம் ஒட்டிக் கொண்டமையை அவதானிக்க முடிந்தது. அஞ்சலி நிகழ்வு கற்பூரமேற்றி ஆரம்பிக்கப் பட்டது. அதைத் தொடர்ந்து முன்னாள் போராளிகளின் திலீபனின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இதையடுத்து மக்கள் பிரதிநிதிகள் அஞ்சலி செலுத்தினர் அடுத்து பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். அதன்போது சோகம் தாங்காது சில தாய்மார்கள் அழுத காட்சியைக் காணமுடிந்தது. 30 ஆண்டுகள் கடந்தும் இப்பொழுதும் மக்கள் மனங்களிலே திலீபன் வாழ்ந்த கொண்டுடே இருக்கிறான் என்பதைப் பறை சாற்றி நிற்கின்ற நிகழ்வாகவே இதைப் பார்க்க முடிகிறது.

இதேவேளை முன்னாள் போராளி ஒருவர் தீபனுக்கு அஞ்சலி செலுத்து வதற்காக கைதடிப் பிள்ளையார் கோவிலிருந்து தூக்குக் காவடி எடுத்து நல்லூரில் திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்திற்கு வருகைதந்து தனது வேண்டுதலை நிறைவு செய்ததுடன் தூக்கில் இருந்தபடியே திலீபனுக்கு மாலை அணிவித்தார். முன்னாள் போராளியின் இச்செயலானது அங்கு குழுமியிருந்த மக்களை நெகிழ்ச்சிக் குள்ளாக்கியது.

நிகழ்வில் திலீபனுக்குக் கவிதாஞ்ச லியும் நினைவுரைகளும் இடம் பெற்றன. அங்கு பிரசன்னமாகி இருந்த தமிழ் கட்சிகளில் தமிழரசுக் கட்சியைச்சேர்ந்த உறுப்பினர்களுக்கு சிறப்புரைகள் மறுக்கப்பட்டமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. 'எல்லோருக்கும் அழைப்பு விடுத் தோம்' என்று ஜனநாயக் கட்சியினர் தெரிவித்திருந்தபோதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செல்வாக்கே அதிகமாக இருந்தமையைக் காணமுடிந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்லையா கஜேந்திரன் திட்டமிட்டே தமிழரசுக் கட்சியினரை சிறப்புரையாற்றவிடாது தடுத்ததாக அங்கு கூடியிருந்தோரில் சிலர் தமக்குள் பேசிக்கொண்டனர். இச் சம்பவம் அக்கட்சி ஆதரவாளர்களுக்கு கசப்புணர்வை ஏற்படுத்தி விட்டதாக இதை அங்கு நின்ற ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

மஹிந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் புலிகளின் நினைவுகூரல் உட்பட இறந்த பொது மக்களின் நினைவுகூரல்களையும் இராணுவத்தினர் தடுத்திருந்தனர். அதனையும் மீறி நினைவுகூரலை மக்கள் மேற்கொண்டபோது இராணுவத்தின் காட்டுமிராண்டித் தாக்குதல்களால் அவை நிறுத்தப் பட்டன. இதனூடாக ஒன்றை மட்டும் அந்த அரசாங்கம் தெளிவாகக் கூறியது. 'புலிகள் பயங்கரவாதிகள் அவர்களை தாம் வெற்றி கொண்டதாகவே வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டும்." இப்படியான நினைவேந்தல்களால் புலிகள் நியாப்படுத்தப்பட்டு விடுவார்கள் அதோடு தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் சமஷ்டியும் நியாயமானதாகிவிடும். அத்துடன் மக்கள் உள்ளுணர்வையும் உலகம் அறிந்துவிடும்' என்ற அந்த அரசியல் கணக்கை மையமாக வைத்தே இராணுவத்தினரால் திட்டமிட்டு வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

கடந்த 2012ஆண்டு யாழ்.பல்கலைக் கழகத்தில் மாணவர் களினால் மேற்கொள்ளப்பட்ட மாவீரர் நினைவேந்தலில் இராணுவத் தினரால் வன்முறைகள் மேற்கொள்ளப் பட்டது. அதனைக் கண்டித்து மறுநாள் பல்கலைக்கழக வாசலில் கல்விப் பகிஷ்கரிப்பை மாணவர்கள் மேற்கொண்டிருந்தனர். அவ்வேளை யில் திட்டமிடப்பட்டு இராணுவத் தினர் மற்றும் பொலிஸார் அங்கு வரவழைக்கப்பட்டு மாணவர்கள் மீது கொடூரத் தாக்குதல்களை மேற்கொள் ளப்பட்டது. அது மட்டுமின்றி பல மாணவர்களை இராணுவத்தினர் கைது செய்து புனர்வாழ்வுக்கு அனுப்பி வைத்திருந்தனர். இவ்வாறு இராணுவ வன்முறைகளினால் புலிகளினதும், போரின்போது கொல்லப்பட்ட பொது மக்களினதும் நினைவேந்தல்களை நிறுத்தி வைத்திருந்தது மஹிந்த அரசு.


தற்பொழுது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த அரசாங்கமும் தம்மை நல்லிணக்க அரசாங்கமாக சொல்லிக் கொண்டு திட்டமிட்ட வகையில் பல காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகிறது. இருந்தும் சர்வதேச நெருக்கடிகளுக்கு அஞ்சி சில விட்டுக் கொடுப்புகளை இந்த அரசு செய்துவருகிறது.

அதன் ஒரு அம்சமாகவே புதிய அரசியல் சாசனமும் பார்க்கப்படு கிறது. தமிழ்மக்களுக்கு சரியான தீர்வை முன் வைத்து விட்டோம் என்று ஐநாவையும் ஏமாற்ற வேண்டும். அதேவேளை தமிழ்மக்க ளையும் ஏமாற்றவேண்டும் அதற்காக உருவாக்கப்பட்டதே இந்த புதிய அரசியல் சாசன நாடகம் என்பது பலரின் கருத்து. இதனை எவரையும் குழப்ப விடாது அரசு மிகவும் சாதூ ர்யமாக பார்த்துக் கொண்டு வருகின் றது. அதன் ஒரு அங்கமே இத்தகைய நிகழ்வுகளைக் கண்டும் காணாது இருப்பது. இறந்தவர்களை நினைவுகூரலாம் என்ற போர்வையில் புலிகளை நினைவுகூருவதை அனுமதித்துள்ளது. அதுவே திலீபனுக்கு காணிக்கையாக்கிருந்த பாடலுடன் அவனை தன்னெழுச்சி யாக நினைவுகூர வழிசமைத்தது எனலாம்.

மாவீரர்களின் எண்ணிக்கை 650 தொட்டிருந்த வேளையிலேயே 1987ஆம் ஆண்டு இந்த அகிம்சைப் பாதையை திலீபன் திறந்து வைத்தார். அவர் இந்திய இராணுவத்தினால் உதாசனம் செய்யப்பட்டார். இறுதியில் அவர் மண்ணுக்காக இறந்து போனார். அதனைத் தொடர்ந்து உச்சமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமான போர். பின்னர் தோல்வியைத் தழுவிக் கொண்ட இந்திய இராணுவம் நாடு திரும்ப-

( 18 ஆம் பக்கம் பார்க்க)





# சண்டையும் சமாதானமும்: மீன் தொட்டி வேதாந்தம்

எங்கள் வீட்டில் ஒரு மீன்தொட்டி இருக்கிறது. அதில் குறுக்கும் நெடுக்குமாய் அழகு மீன்கள் நீந்துகின்றன. தங்கமீன்கள் இரண்டு, கறுப்பு மீன்கள் நாலு, நீல வண்ண மீன்கள் இரண்டு. அழுக்கு நிறத்தில் மீன்தொட்டியின் கண்ணாடிச் சுவரில் ஒட்டிக்கொண்டு ஒரு மீன்.

ஒருநாள் எனக்கு அலுவலக விடுமுறை. மீன் தொட்டியை வேடிக்கை பார்க்க உட்கார்ந்தேன். மீன்களின் சுறுசுறுப்பான நளினமான அசைவுகளுடன் கூடிய நீச்சல் பார்க்கத் தெவிட்டவில்லை. இவ்வளவு இயக்கத்தின் நடுவிலும் தொட்டிக்குள் நிசப்தம் நிலவியது. தங்கமீன்களின் வயிற்றில் தங்கமுலாம் பூசியிருக்கிறது. முதுகும் வாலும் ஒரேஞ் நிறம். முகத்தில் இரண்டும் கலந்த அற்புதப் பூச்சு. கரும்புள்ளிக் கண்கள். இரண்டு மீன்களும் கணவன் மனைவி போலும். நீல வண்ண மீன்களைப் பார்த்தால் தம்பதிகளாகத் தெரியவில்லை. நண்பர்களாக இருக்கக்கூடும்.

### மீசை ராஜா

'ராங்க் க்ளீனர்' என்று அழைக்கப்படும் மீனுக்கு 'சாமியார் மீன்' என்று பெயர் சூட்டினேன். சதா சர்வகாலமும் தொட்டியின் கண்ணாடிச் சுவரில் ஒட்டிக்கொண்டு தியானத்தில் மூழ்கியிருந்தது. பாசிகள் விருட்சங்களாக நிற்கின்றன. கூழாங்கற்கள் பாறைகளாய்த் தோன்றின. திடீரென்று பாறையின் பின்னாலிருந்து பெரிய மீசையுடன் ஒரு மீன்வெளிப்பட்டது. மீனின் உடம்பை விட நீளமான மீசை. இப்படி பெரிய மீசையுடன் ஒரு மீனை நான் பார்த்தது இல்லை. மீசைக்காரன் மீசையை ஆட்டியபடி தொட்டியைச் சுற்றிவந்தான். மீசையின் ஓரங்களில் நெடுகக் கூரான முட்கள். ஆக மீசை என்பது ஒரு உறுப்பு மட்டுமல்ல, ஆயுதமும் கூட என்று தோன்றியது. மீசைக்காரனின் தோரணை ஏதோ அந்த கண்ணாடித் தொட்டியே தன் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசம் போலவும் அங்கு நீந்தும் மற்ற மீன்கள் அதன் பிரஜைகள் போலவுமாக இருந்தது. எல்லாம் ஒழுங்காகவும் செம்மையாகவும் நடைபெறுகிறதா என்பதுபோல் பார்த்துவிட்டுப் பாசியின் பின்னிருந்த ஒரு இருண்ட பகுதிக்குள் மறைந்துவிட்டான்.

### திடீர்த் தாக்குதல்

நான் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அந்த 'விபரீதம்' நிகழ்ந்தது. பாசியின் பின்புறமிருந்து மீசைக்காரன் வெளிப்பட்டான். அமைதியாக நீந்திக்கொண்டிருந் தங்கமீனின் முகத்தில் மீசையால் ஒரு பிராண்டு பிராண்டிவிட்டு விசுக்கென்று மறைந்துவிட்டான். தங்கமீன் துடித்துப் போய்விட்டது. அப்போதுதான் கவனித்தேன் அதன் வயிறு உப்பி இருந்தது. பிள்ளைத்தாய்ச்சி போலும், அடப்பாவமே!

மீசைக்காரன் மறுபடி வெளிப்பட்டான். மறுபடி தங்கமீனை நெருங்கினான். தங்கமீன் பாசிக்குள் பதுங்க முயன்றது. ம்ஹூம் பிரயோசனமில்லை! ஒரு பாய்ச்சல் ஒரு பிராண்டல் மீசைக்காரன் மறைந்துவிட்டான். இந்த முறை தங்கமீனின் வயிற்றில் தாக்குதல் ரத்தக்கோடு தெரிந்தது. தங்கமீன் துடி துடித்தபடி புருஷனிடம் சென்றது. புருஷன் ஆக்ரோஷத்துடன் தொட்டியைச் சுற்றி வந்தான். மீசைக்காரனை வெளியே இழுத்துவிட்டது. மீசைக்காரனின் மீசை சாட்டைபோல் சுழன்றது.

நீல மீன்கள் இரண்டும் இப்போது தங்கமீனுக்குப் பரிந்து கொண்டு மீசைக்காரனைத் தாக்கின! மீன்தொட்டியில் திடீரென்று ஏற்பட்ட களேபரத்தில் பாசிமரங்கள் ஆடின. தொட்டிநீர் கலங்கிப்போய் மீன்களையே பார்க்க முடியவில்லை. என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை.

### அகிம்சைப் பாடம்!

மீன்கள் எல்லாம் ஒரே சமயத்தில் சண்டை போடத் தொடங்கிவிட்டன.

இவ்வளவு ரகளைக்கு நடுவிலும் மீன்தொட்டியின் கண்ணாடிச் சுவரில் அழுக்கு மீனின் (சாமியார் மீன்!) தியானம் தொடர்ந்தது. மழை வரும்போல் இருந்தது. நான் மொட்டைமாடியில் காயப்போட்ட துணிகளை எடுத்துவரப் போனேன். திரும்பியபோது தொட்டியைக் கவனித்தேன். என்ன ஆச்சரியம்!

தொட்டி நீர் தெள்ளத் தெளிவாக இருந்தது. மீன்கள் எல்லாம் ஒற்றுமையாக நீந்திக்கொண்டிருந்தன. தங்கமீன்களுடன் மீசைக்காரன் விளையாடிக்கொண்டிருந்தான்.

நீல மீன்கள் மேலும் கீழும் நீந்தின. சற்றுமுன் யுத்தகளமாகக் காட்சியளித்த மீன் தொட்டியில் அமைதியும் நிசப்தமும் நிலவின. அடடா! வாழ்க்கையை ஒரு சின்னஞ்சிறு கண்ணாடித் தொட்டிக்குள் கழிக்குமாறு சபிக்கப்பட்ட பரிதாப ஜீவன்கள்!

அவற்றுள் ஏற்பட்ட சண்டை, களேபரம் மறைந்து நான் சற்று அகன்று திரும்புவதற்குள் சமாதானம் எப்படி ஏற்பட்டிருக்கும்?

இப்போது அவற்றுக்கு இடையே எத்தனை ஒற்றுமை, அன்னியோன்னியம்! காரணம் எதுவானாலும் (மீன்களின் உலகத்தை மனிதக் கண்கள் கொண்டு பார்க்க முடியாது என்றாலும்) ஒரு சிறு கண்ணாடித் தொட்டிக்குள் அது சாத்தியமாகியிருக்கிறது என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது! என் யோசனைகளைக் கலைத்துக்கொண்டு நண்பரின் குரல் கேட்டது. அவர் முகத்தில் வருத்தம், வாட்டம். "வீட்டில் ஒரே களேபரம். உப்புப்பெறாத விஷயத்துக்கு சண்டை சார். மனசே சரியில்லை. நீங்கதான் ஆறுதலாக ஏதாவது சொல்லுவீர்களே! வந்துவிட்டேன்!"
"உங்களுக்கு மீன்தொட்டி வேதாந்தம் தெரியுமா?" என்று ஆரம்பித்தேன்.

நன்றி: தி இந்து

# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

(தொடர் 06)

- வல்வை ரவி -

# நெல்லியடி



இலங்கைத் திருநாட்டின் வட இலங்கை பண்பாடுகள் நிறை தேசமாகும். இப்பகுதியில் தனித்துவமான பண்புகள் நிறையப் பெற்ற நகராக நெல்லியடி அமைகின்றது. இந்நகர் கரவெட்டி, கரணவாய் எனும் சிற்றூர்களையும் அவ்வூர்கள் கரம்பொன், கரப்புக்குறிச்சி, கிழவித் தோட்டம், பெரிய தோட்டம், யார்க்கரு, கட்டவேலி, கலட்டி, மாத்தனை, தில்லையம்பலம், இராஜகிராமம், கம்பொல்லை, இடக்குரிச்சி போன்ற சிறுகிராமங்களையும் கரணவாய் பகுதியில் எள்ளங்குளம், கங்கைகொண்டான், சோழங்கன், இளங்காமம், மணல்பாதி மற்றும் மணலவாடி, மணியகாரன் தோட்டம், வீரபதிராஜன் முதலான சிறு ஊர்களையும் உள்ளடக்கியுள்ளது. இக்கிராமக் கூட்டங்களது பண்பாட்டுக் கூட்டு புகழ்மிக்க மண்வாசனையை வீசச் செய்கின்றது.

நிலம், நீர், தாவரம் முதலான இயற்கை நிலப் பெயர்களே காலத்தால் முற்பட்ட இடப் பெயர்கள் என்பதும் அப்பெயர்கள் வரலாறு பேசுவதும் யாவரும் அறிந்ததே. இவற்றுள்ளும் தாவரப் பெயர்களே காலத்தால் முற்பட்டவை என்ற கருத்தும் உள்ளது. அவ்வகையில் தோன்றியதே நெல்லியடியும். அதாவது பழைமையான ஓர் நெல்லிமரம் இன்றைய பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இருந்ததாகவும் அம்மரத்தைக் காரணமாகக் கொண்டு நெல்லியடி என்ற பெயர் உருவானதாகக் குறிப்பிடுவர்.

நெல்லியடி வடமராட்சியின் மையப்பாட்டிடம். தமிழர் வரலாற்றில் - வரலாற்றுக் கறை படிந்த - வீரம் செறிந்த தடங்கள் பல பதிவாகிய பிரதேசம். இங்கு துலுக்கன் கோட்டை என வழங்கப்படும் தொலுக்கன் கோட்டையின் அழிபாடுகளும் காணப்படுகின்றன. அதேவேளை இலங்கையை 44 ஆண்டுகள் நீதி நிலை தவறாது மனுநீதி கண்ட சோழனுடன் ஒப்பிடத்தக்க ஆண்ட பெருவேந்தன் எல்லாள மன்னனது பெயருடன் தொடர்புபட்ட எள்ளங்களும் என்ற சிறு குளம் காணப்படுகின்றது. இதனை அண்டிய பகுதியில் மாவீரர் துயிலும் இல்லம் (தற்போது அழிக்கப்பட்டு விட்டது) அமைக்கப்பட்டிருந்தது. கங்கை கொண்டான், சோழங்கன் போன்ற சிறு கிராமப் பெயர்களும் சோழராட்சியுடன் தொடர்பு பட்டிருப்பதனை அவதானிக்கும் போது எல்லாள மன்னனது பெயருடன் தொடர்புபட்ட எள்ளங்குளம் முதலானவை அனைத்தும் சோழராட்சிக்கு உட்பட்ட பகுதிகளாகவே கொள்ள வேண்டியுள்ளது. இது பற்றிய ஆய்வுகள் மேலெழும்போது இன்னும் பல மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும்.

கல்வி ரீதியிலும் பழைமையான தேசமாக நெல்லியடி அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (நெல்லியடி மத்திய கல்லூரி) 1946 ஆம் ஆண்டு இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படும் சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரவினால் 54 பாடசாலைகள் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப் பட்டபோது மகா வித்தியாலயமாக்கப்பட்டு, இன்று தேசியப் பாடசாலையாகவும் உயர்ந்து விளங்குகின்றது. இதேபோல நூற்றாண்டு காணும் விக்னேஸ்வராக் கல்லூரி மற்றும் ஸ்ரீ நாராதா வித்தியாலயம், வேதாரணிஸ்வரா, திருஇருதயக் கல்லூரி போன்றன முக்கிய கல்வி நிறுவனங்கள் ஆகும். இதில் ஸ்ரீ நாரத வித்தியாலயம் பௌத்த மதம் பரப்பும் நடவடிக்கையின் பின்னணியில் கண்பொல்லைப் பகுதியில் பிக்குகளால் உருவாக்கப்பட்டது. இதேசமயம் வேதாரணிஸ்வரா வித்தியாலயம் பிராமணர்களுக்கான வித்தியாலயமாக கரவெட்டியில் உருவாக்கப்பட்டது.

கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவர் கரவெட்டியை சேர்ந்த மாப்பாண முதலியார் மகன் வேலாயிதம்பிள்ளை என்பவர் மீது கரவை வேலன் கோவை என்ற நூலைப் பாடியுள்ளார். கதிர்காமநாதன், முருகானந்தம் முதலான எழுத்தாளர்கள் இப்பகுதியைச் சேர்ந்தவர்களே.

கி.பி. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியில் சாதி வெறி மேலோங்கி இருந்த காலத்தில் கண்பொல்லைப் பகுதியில் சாதியத்துக்கு எதிரான போராட்டத்தில் 1970.02.12 அன்று மூவர் தம் உயிரைத் தியாகம் செய்திருந்தனர். இன்று வறுமை நிலையிலும் கல்வி, பண்பாட்டில் இப்பகுதி முனைப்புடன் முன்னுதாரணமாக செயற்பட்டு வருகின்றனர்.



இந்து, கிறிஸ்தவ சமய நெறிகளைப் பின்பற்றுகின்ற மக்கள் நெல்லியடியில் வாழ்ந்து வருகின்றனர். இங்கு பல இந்து, கிறிஸ்தவ வணக்கஸ்தலங்கள் காணப்படுகின்ற அதேசமயம், தில்லையம்பலம் கோவிலில் சிறப்பானதொரு வழிபாடு இடம் பெற்று வருவதைக் காணலாம். அதாவது கால்நடைகளுக்கு ஏதாவது நோய், காயங்கள் ஏற்பட்டால் இக்கோயிலுக்கு நேர்த்தி வைப்பதும் அதனை அடுத்து நேர்த்திக் கடன் செய்வதையும், சில கால்நடைகளை இக்கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கும் வழக்கமும் இன்றும் உள்ளது.

'மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்" என்றம் நம்மினத்தின் தேசியத் தலைவர் பிரபாகரனின் சிந்தனை வரிகளுக்கு அமைய விடுதலைப் புலிகளின் முதல் தற்கொடை (கரும்புலி)தாக்குதல் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் முகாமிட்டு நின்ற இராணுவத்தினருக்கு எதிராக 1987 ஜூலை 05 ஆம் நாள் கரும்புலி கப்டன் மில்லரால் நடத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் தளபதியான மேஜர் சோதியா (யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி), பிரிகேடியர் விதுஷா ஆகியோர் உட்பட நூற்றுக்கணக்கான போராளிகளை ஈந்து தந்த பூமியும் இப்பிரதேசமே. தியாகங்களாலும் பண்பாட்டுக் கூறுகளாலும் தமிழ் பாரம்பரிய மண் வாசனை இன்னமும் வீசிக் கொண்டிருக்கும் - வீசும் நகராக நெல்லியடி விளங்குகின்றது.



# வாரப்பலன்

### மேடம்
உங்கள் திட்டங்கள் வெற்றியடையும், மனநலம் நன்றாக இருக்கும், எதிர்பார்த்த விடயங்கள் நல்லபடி நடக்கும், சகோதரர்கள் உதவுவார்கள், உத்தியோகம் சாதகமாக இருக்கும், பேச்சில் நிதானம் தேவை.

**தேவியை வழிபடுங்கள்.**

### ரிஷபம்
சஞ்சலம் நீங்கும், உற்சாகம் கரைபுரளும், பட்டம், பாராட்டு, விருதுகள் பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். கையில் பணம் புரளும். பழைய கடன்களை அடைப்பீர்கள்.

**சிவனை வழிபடுங்கள்.**

### மிதுனம்
குழந்தை இல்லாதவர்களுக்கு தாய்மைப் பாக்கியம் கிட்டும், வர வேண்டிய பணம் வந்து சேரும். காது, தொண்டைப் பிரச்சினைகள் வந்து நீங்கும், வியாபாரம் இலாபகரமாக நடக்கும். **குரு பகவானை வழிபடுங்கள்.**

### கடகம்
மகிழ்ச்சி, மனோ தைரியம் உண்டு. சொத்து வாங்கும் முயற்சி பயனளிக்கும். வழக்குகளில் சமரச உடன்பாடு ஏற்படும். ஆன்மிக, தர்ம சிந்தனைகள் அதிகரிக்கும்.

**இராமானுஜரை வழிபடுங்கள்.**

### சிம்மம்
எதையும் எதிர்கொண்டு வெற்றி பெறுவீர்கள், அறவிட முடியாதிருந்த பணம் வசூலாகும், மனைவியின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள், தாயாரின் உடல்நலம் சீராகும், திடீர் பயணங்கள் இருக்கும். **சுக்கிரேஸ்வரரை வழிபடுங்கள்.**

### கன்னி
தந்தையிடம் ஏற்பட்ட மன வருத்தங்கள் நீங்கும், கன்னிப் பெண்களின் கனவுகள் நிறைவேறும், பணம் புரளும், அடமானத்திலிருந்து நகைகளை மீட்பீர்கள்.

**ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.**

### துலாம்
ஏற்றமும், மாற்றமும் உண்டு, உயர் பதவியில் இருக்கும் நண்பர் உதவுவார், வீண் அலைச்சல் ஏற்படும், நேரத்திற்கு சாப்பிட முடியாத நிலை இருக்கும்.

**அம்மனை வழிபடுங்கள்.**

### விருச்சிகம்
சிகிச்சையில் இருப்பவர்கள் குணமடைவார்கள், வழக்கு சம்பந்தமான முடிவுகள் சாதகமாக இருக்கும், சொத்து வாங்கும் யோகம் உள்ளது, சில சங்கடங்கள் வரலாம், வியாபாரம் இலாபகரமாக இருக்கும். **முருகனை வழிபடுங்கள்.**

### தனுசு
சஞ்சலம் நீங்கும், புதிய வேலை சம்பந்தமாக நல்ல செய்தி கிடைக்கும், பெரிய வீட்டிற்கு குடிபோவீர்கள், செலவுகள் கூடும், அலுவலகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**அம்மனை வழிபடுங்கள்.**

### மகரம்
எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும், புதுமணத் தம்பதியருக்கு குழந்தைப் பாக்கியம் உண்டு, தடைபட்ட சுபகாரியம் கைகூடும், அலுவலகத்தில் வேலைச்சுமை குறையும்.

**திருமாலை வழிபடுங்கள்.**

### கும்பம்
எதையும் சவாலாகச் செய்து முடிப்பீர்கள், சொத்துச் சம்பந்தமாகச் சமரச உடன்பாடு ஏற்படும், பணம் புரளும், அடைவிலிருந்து நகைகளை மீட்பீர்கள்.

**இராமரை வழிபடுங்கள்.**

### மீனம்
பண வரவுகள் உண்டு, பழைய கடன்களை அடைப்பீர்கள், குடும்ப மனக் கசப்புக்கள் மறையும், மகள் திருமண விடயம் கூடிவரும், ஆன்மிக தாகம் அதிகரிக்கும்.

**நடராஜரை வழிபடுங்கள்.**




ஊடகவியலாளர் அமரர் அஸ்வின் சுதர்சன் நினைவும், 'கோடுகளால் பேசியவன்' நூல் வெளியீட்டுவிழாவும் கடந்த 24 ஆம் திகதி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றபோது...




மாபெரும் விவசாயக் கண்காட்சி யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய திணைக்களத்தில் கடந்த 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை இடம்பெற்றபோது...




கிழக்கு மாகாண விவசாயக் கண்காட்சி கடந்த 22ஆம் திகதி வட மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்றபோது...



தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டப் பொதுச்சபைக் கூட்டம் வட மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தலைமையில் கடந்த 23ஆம் திகதி நடைபெற்றபோது...




1995 இல் நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது இலங்கை விமானப்படை நடத்திய குண்டு வீச்சில் பலியான 21 மாணவர்களின் நினைவுதினம் கடந்த 22 ஆம் திகதி அப்பாடசாலையில் நினைவுகூரப்பட்டபோது...



# குட்டீஸ்...!

உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com

# சுயநல பூதம்

மரம், செடி, கொடிகள் நிறைந்த அழகான தோட்டம். மலர்கள் பூத்துக் குலுங்க, இலைகள் மெல்ல அசைந்து தென்றலை வரவேற்றுக் கொண்டிருந்தன. பறவைகள் கீதம் பாட, புல்வெளி பசுமைக் கம்பளமாகப் படர்ந்திருந்தது. அந்தத் தோட்டம் ஒரு பூதத்துக்குச் சொந்தமானது. வெளியூர் சென்றிருந்த பூதம் பல ஆண்டுகளுக்குப் பிறகு அப்போதுதான் திரும்பியிருந்தது. தோட்டத்தைப் பார்த்து அதிர்ந்தது. தான் இல்லாதபோது சிறுவர்கள் தோட்டத்துக்குள் நுழைந்து விளையாடியதுடன், அதைப் பாழடித்ததையும் கண்டு கோபத்தில் கொப்பளித்தது.

விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் பூதத்தின் கர்ஜனையைக் கேட்டு ஓடி ஒளிந்தனர். அவர்கள் மீண்டும் உள்ளே வருவதைத் தடுக்க, தோட்டத்தைச் சுற்றிப் பெரிய சுவரைக் கட்டி, அதன் மீது 'அனுமதி இன்றி உள்ளே நுழைவோர் தண்டிக்கப்படுவர்' என்று எழுதிவைத்தது.

பாடசாலை முடிந்து வீட்டுக்குத் திரும்பிய குழந்தைகள், தோட்டத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டனர். குளிர் காலம் முடிந்து வசந்த காலம் பிறந்தது. நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ள மரங்களும் செடிகளும் கொடிகளும் வசந்தகாலத்தை வரவேற்கப் பூத்துக் குலுங்கின. பறவைகள் ரீங்காரமிட்டன. ஆனால், சுயநலம் கொண்ட பூதத்தின் தோட்டத்தில் மட்டும் இன்னும் பனி பொழிந்துகொண்டிருந்தது. வசந்தகாலம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

குழந்தைகள் இல்லாததால் பூக்கள் பூக்கவில்லை. பறவைகள் பாடவில்லை. ஒரே ஒரு மொட்டு மட்டும் தலையைத் தூக்கிப் பார்த்தது. 'அனுமதி இன்றி உள்ளே நுழைவோர் தண்டிக்கப்படுவர்' என்னும் வாசகத்தைப் பார்த்தவுடன் 'குழந்தைகள் இல்லாத தோட்டத்தில் நான் யாருக்காக மலர வேண்டும்?' என்று எண்ணிப் பூக்கவில்லை. வசந்தம் வராததால் பனிப்பொழிவும் அங்கேயே தங்கிவிட்டது. இலைகளும் புல் தரையும் பச்சை ஆடைக்குப் பதில் வெள்ளை ஆடையை உடுத்திக் கொண்டன. பூதம் குழப்பம் அடைந்தது.

திடீரென்று பூதத்தின் காதுகளில் தேன் பாய்வதுபோல இனிமையான சங்கீதம் கேட்டது. அதுவரை வீசாத தென்றல் வீசியது. மலர்களின் வாசனை பரவியது. பூதத்துக்குத் திடீரென்று சந்தேகம். இத்தனை நாட்களாக வராத வசந்தம் இப்போது மட்டும் வருவதற்கான காரணத்தைத் தெரிந்துகொள்ள வெளியே பார்த்தது.

சுவரில் ஏற்பட்ட சின்ன ஓட்டை வழியே சிறுவர்கள் உள்ளே நுழைந்து விளையாடிக்கொண்டிருந்தனர். குழந்தைகள் உள்ளே வந்ததால் மலர்கள் பூத்தன. பறவைகள் கீதம் பாடின. ஆனால், ஒரே ஓர் இடத்தில் மட்டும் வசந்தம் வரவில்லை. பனியும் பொழிந்துகொண்டிருந்தது. அங்கே ஒரு சிறுவன் கிளையில் அமர முடியாமல் தவித்துக்கொண்டிருந்தான்.



இந்தக் காட்சிகள் பூதத்தின் மனதை மாற்றின. 'குழந்தைகள் இல்லாத தோட்டத்தில் பசுமை இருக்காது, பூக்கள் பூக்காது, பறவைகள் பாடாது' என்ற உண்மையைப் புரிந்துகொண்டது. மளமளவென்று கீழே இறங்கிய பூதம், கதவைத் திறந்து விட்டது. பூதத்தைப் பார்த்தவுடன் குழந்தைகள் நடுங்கின. ஆனால், அந்தச் சிறுவன் மட்டும் மரத்தை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான். மனம் திருந்திய பூதம், அவனை மெதுவாகத் தூக்கி மரக் கிளையில் உட்கார வைத்தது.

சிறுவன் மரக்கிளையில் உட்கார்ந்த உடனே பனி விலகியது, புல்வெளியில் பசுமை படர்ந்தது. பூக்கள் பூத்தன. தரையும் பச்சை ஆடைக்கு மாறியது. பறவைகள் பாடத் தொடங்கின. சிறுவன் குதூகலத்துடன் பூதத்தைக் கட்டிப் பிடித்து முத்த மழை பொழிந்தான். பதிலுக்கு பூதமும் அந்தச் சிறுவனை வாரி அணைத்தது. பூதமும் சிறுவனும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் மற்ற குழந்தைகள் அச்சம் நீங்கி, மீண்டும் தோட்டத்துக்குள் நுழைந்தனர். அவர்கள் நுழைந்த அடுத்த நொடியே மீண்டும் பறவைகள் பாடின. தென்றலும் தவழத் தொடங்கியது.

வழக்கம்போல் குழந்தைகள் தோட்டத்துக்குள் வந்து விளையாடினர். ஆனால், பூதம் முத்தம் கொடுத்த அந்தக் குழந்தை மட்டும் வர வேயில்லை. மாதங்கள், வருடங்கள் உருண்டோடின. பூதத்துக்கும் வயதானது. சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு குழந்தைகள் விளையாடுவதை ரசித்துக்கொண்டே, 'எனது தோட்டத்தில் எத்தனையோ பூக்கள் இருக்கின்றன. வேறு எங்குமே காண முடியாத அபூர்வ மலர்களும் உள்ளன. ஆனால், உலகிலேயே மிகச் சிறந்த அழகான பூக்கள் இந்தக் குழந்தைகள்தான்' என்று நெஞ்சம் நெகிழ்ந்தது பூதம்.

திடீரென்று ஒருநாள் தோட்டத்தின் மூலையில் காணாமல்போன சிறுவன் நிற்பதைப் பார்த்தது பூதம். சிறுவனின் உள்ளங்கைகளிலும் கால் பாதங்களிலும் ஆணிகள் அடித்த அறிகுறிகளைக் கண்டு வருத்தமடைந்தது. 'யார் உன் கைகளிலும் கால்களிலும் ஆணிகளால் அடித்தது? இந்தக் கொடுமையைச் செய்த அந்தப் பாதகன் யார்?' என்று கேட்டது.

'கோபப்படாதீர்கள். யாரும் என்னைக் கொடுமைப்படுத்தவில்லை. இது அன்பால் விளைந்த காயங்கள்' என்று புன்னகை செய்தவாறே சிறுவன் பதிலளித்தான். வந்தது யார் என்று இப்போது பூதத்துக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது. பேச்சு வரவில்லை. தொண்டை அடைக்கச் சிறுவனிடம் மன்னிப்புக் கேட்டது.

சிறுவன் சிரித்தபடி, "என்னை ஒரு நாள் உங்கள் தோட்டத்தில் விளையாட அனுமதித்தீர்கள். அந்த நன்றிக்காக இப்போது உங்களை என் பரலோகத் தோட்டமான சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்கிறேன்" என்றான்.

பூதம் மகிழ்ச்சியோடு புறப்பட்டது.

---


○ கறிவேப்பிலையில் வாய் புண் வராது தடுக்கும் ரைபோபிளேயின் என்ற சத்து நிறைந்துள்ளது.

○ வாழைத் தண்டு உடலில் இருக்கும் நச்சுப் பொருள்களையும், சிறுநீரகக் கற்களையும் நீக்க வல்லது.

○ கணவாயில் இருக்கும் நஞ்சு இரத்த ஓட்டத்தை சீராக்கி இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும் மருந்தாகப் பயன்படுகிறது.

○ நகம் கடிக்கும் பழக்கம் தன்னம்பிக்கை இன்மையையும், நரம்புக் கோளாறுகளை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்தது.

○ இரவில் படுப்பதற்கு 90 நிமிடங்களுக்கு முன்னதாக உணவருந்துவது நல்லது.



## தகவல் அறிவோம்...!



○ தேயிலையில் புற்றுநோயைக் குணப்படுத்தும் சில மூலகங்கள் உள்ளன.

○ முக்கிய நபர்களை அல்லது நேர்முகத்தேர்வின் போது ஏற்படும் பதற்றத்தைத் தவிர்க்க புத்தகம் அல்லது பத்திரிகை படிப்பது நல்லது. மன அழுத்தத்தை இது குறைக்கும்.

○ மரக்கறி உணவுகளை நன்கு சமைத்துச் சாப்பிடுவது தவறான பழக்கமாகும். பச்சையாக அல்லது அரை அவியலாக சாப்பிடுவதே நல்லது.

○ பசு மாட்டின் நெய் எந்தக் கெடுதலும் இல்லாதது. உடல் எடையையும் கூட்டாது.

## புலி சில தகவல்கள்

▲ காட்டின் ராஜா சிங்கம் என்று அறிந்திருப்பீர்கள். ஆனால் அதிக மக்கள் விரும்புவது புலியைத்தான். அந்த வகையில் புலியை மக்கள் ராஜா எனலாம்.

▲ புலிகளின் கண்களை நேருக்கு நேர் பார்த்தால் அது எம்மைக் கொல்லாது என்பது நம்பிக்கை. புலிகள் பதுங்கிப் பாயும் இயல்புடையவை. அவை பதுங்கியிருப்பதை நாம் அறிந்தால் அது தாக்காது என்பதே உண்மை.

▲ அதிக தண்ணீர், இரை இருக்கும் அடர் காடுகளில்தான் புலிகள் வாழும். இரை கிடைக்கும் அளவைப் பொறுத்தே புலிகளின் எல்லை பிரிக்கப்படும்.

▲ தன்னிலும் பார்க்க இரு மடங்கு பெரிய மிருகங்களையும் புலிகள் இலகுவாக வீழ்த்தி, அலேக்காகத் தூக்கிச் செல்லும்.

▲ புலிகள் உணவை ஒருபோதும் வீணாக்குவதில்லை. மீதமாகும் உணவை இலைகளால் மூடி மறைத்து வைத்து பின்னர் உண்ணும்.

▲ குட்டிகளும், பெண் புலியும் உண்ணும் வரை ஆண் புலி பொறுமையாக காத்திருக்கும். ஆனால் ஆண் சிங்கம் இதற்கு நேர்மாறானது.

▲ புலிக் குட்டிகளுக்கு 6 மாதங்களிலேயே வேட்டைப் பயிற்சி ஆரம்பமாகி விடும். 5 மாதங்களில் அது தனியாக வேட்டைக்கு சென்று விடும்.

▲ குட்டிகள் 3 ஆண்டுகள்தான் தாய், தந்தையுடன் வாழும். பின்னர் எல்லை பிரித்துக் கொண்டு தனியாகச் சென்று விடும்.

▲ புலிகளின் கால்கள் மிகவும் வலிமை வாய்ந்தவை. இறந்த பின்னர் கூட நின்று கொண்டிருக்க முடியும்.

▲ புலிகள், இரையை தன்வசப்படுத்த அவற்றைப் போன்றே ஒலி (மெமிக்ரி) எழுப்பக்கூடியவை.



# தடைகளே வெற்றிக்கு உறுதுணை
# அனுமான் கற்றுத்தரும் பாடம்

ஒவ்வொரு மனிதரும் தன் வாழ்வில் இத்தனை கஷ்டங்களா என்று புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். தனக்கு மட்டும் ஏன் இந்தத் துன்பங்கள் என்று கடவுளை நொந்துகொள்ளவும் செய்கிறார்கள். செய்யும் வினைகளுக்கு ஏற்பவே அத்தனைக் கஷ்டங்களும் வருகின்றன என்று தெரிந்தும் அவர்களின் புலம்பல்கள் வேடிக்கையானது. துன்பங்கள் யாவும் தடைகள்தான், அதைக் கடந்தால்தான் சாதனை என்று உணர்வதே இல்லை. மனித வடிவம் ஏற்று வந்த தெய்வங்களுக்கே சொல்ல முடியாத அளவுக்கு துன்பங்கள் வந்ததை நமது புராணங்கள் தெரிவிக்கின்றன. அதை எல்லாம் கேட்டும் நாம் மாறவில்லை.

ஸ்ரீராமருக்குத்தான் எத்தனைத் துன்பங்கள். நாடிழந்தார், நல்ல உறவுகளைத் துறந்தார். அதுமட்டுமா? அன்னை சீதாதேவியை ராவணன் கடத்திச் சென்றதும், அனலில் விழுந்த புழுவாக ராமர் துடித்தார். ஒவ்வொரு கணமும் சீதையைக் காணவே வாழ்ந்தார். ராமாயணம் முழுக்க எத்தனைத் தடைகளை ராமர் கடந்தார் எண்ணிப் பாருங்கள். அன்னை சீதையை மீட்க சுக்கிரீவன் அனுமானை தேர்ந்தெடுத்தார். தெய்வத்தை மீட்கச் செல்லும் காரியம் என்றாலும், தடை வராமல் இருந்துவிடுமா என்ன? வரத்தான் செய்தது. மீட்கப்போவது சிவாம்சமாகிய அனுமான் என்னும் பலம்மிக்க தெய்வம். மீட்கப்படப் போவதும் திருமகள் எனும் சீதாதேவியை. அப்போதுமா தடை வரும் என்று கேட்கலாம். வந்தது் மூன்று வகையான தடைகள் வந்தன.

ஸ்ரீராமரை எண்ணி அவரது நாமத்தை ஜபித்தபடி பறந்து செல்லலானார் ஆஞ்சநேயர். முதலில் அவர் சந்தித்தத் தடை, ஹமைநாகம்' என்னும் மலை. பறந்துகொண்டிருந்த அனுமானை நோக்கி எழுந்த இந்த மலை, ஹனுமனை மேற்கொண்டு பறக்க முடியாதபடி தடுத்தது. ஹஇது ஏதோ சூழ்ச்சி' என்று அனுமார் தனது மார்பினால் இடிக்கத் தொடங்குகிறார். அவரது தாக்குதலைத் தாங்க முடியாத மைநாக மலை, 'நான் உங்கள் எதிரியில்லை நண்பனே! நீண்ட தூரம் பறந்து வரும் உங்களுக்கு இளைப்பாறுதல் தரவே விரும்பினேன், எனவே, என்னில் இருந்து தங்கிச் செல்லுங்கள்' என்று வேண்டிக்கொண்டது. உண்மையில், அனுமானுக்கு ஒரே மூச்சில் இலங்கைக்குத் தாவி செல்லும் திறமை இருக்காது என்று கருதியே அந்த மலை உதவிசெய்ய வந்தது. இதை அறிந்துகொண்ட அனுமான், அந்த உதவியை மறுத்து 'நான் செல்லும் காரியம் அவசரமானது, என் பிரபு ராமச்சந்திர மூர்த்தியின் உயிர் சம்பந்தமானது' என்று கூறி, தடையைத் தாண்டிச் செல்கிறார். அனுமான் மீது விருப்பம்கொண்ட நண்பனால் இந்தத் தடை உருவானது.

அடுத்து அவர் சந்தித்த தடை, நாக மாதா சுரஸ். அவர் ஒரு கோர அரக்கியாக உருமாறி, விரைந்து வந்த ஹனுமானைத் தடுத்தாள். தன்னைத் தாண்டிச் செல்லும் எவரும் தனக்கு உணவாக வேண்டும் என்று கூறி விழுங்க வந்தாள். அவளை அடக்கவும், தடையைக் கடக்கவும் அனுமார் அவளது வாய்க்குள் புகுந்துவிடுகிறார். மீண்டும் காது வழியே வெளியேறிச் சென்றார். உண்மையில், இந்தக் கோர அரக்கியை தேவர்களே உருவாக்கி அனுப்பினார்கள். இலங்கை செல்லும் அனுமார் வெற்றி பெறுவாரா என்பதைப் பரீட்சிக்கவே இந்தச் சோதனை அவருக்கு வைக்கப்பட்டது. அதையும் அநாயசமாக ஆஞ்சநேயர் வென்று, தாண்டிச் சென்றார்.

அடுத்து வரும் மூன்றாவது தடைதான் முக்கியமானது, மிக உக்கிரமானது. அந்தக் கடற்புரத்தை காவல் காத்துவரும் ஹசிம்ஹிகா' என்னும் கொடிய அரக்கியே ஹனுமாரைத் தடுத்து நிறுத்தி, படாதபாடு படுத்துகிறாள். தன்னுடைய ஆளுகைக்குள் இருக்கும் கடலைத் தாண்டிச் செல்லும் ஹனுமானின் நிழலைப் பிடித்து நிறுத்துகிறாள் அரக்கி. அவளது பிடியில் சிக்காமல் பறந்து செல்கிறார் அனுமார். இதனால் கோபமான அரக்கி, அவரின் கொடிய எதிரியாக மாறி, அவரைப் பலவிதங்களில் தடை செய்கிறாள். எந்த நிலையிலும் கலங்காத அனுமார், இறுதியில் அவளது வயிற்றைக் கிழித்து கொன்றுவிட்டு, தடைகளைத் தாண்டிச் செல்கிறார். இலங்கை சென்ற அனுமார் அன்னை சீதாதேவியைக் காண்கிறார். இராவணனிடம் தூது செல்கிறார். சொல்பேச்சு கேளாத இராவணனின் கொட்டத்தை அடக்க இலங்கைக்கே தீ மூட்டிச் செல்கிறார். இவ்வாறு இவரது இலங்கைப் பயணம் வெற்றியை அடைகிறது. ஆனால், இந்த வெற்றியை அடைய அவர் மூன்றுவிதமான தடைகளை சந்திக்கிறார். அதை மனம் தளராமல் எதிர் நின்று வெற்றியும்கொள்கிறார்.

இப்படித்தான் நாம், நம்முடைய லௌகீக வாழ்விலும், ஒவ்வொரு புதிய முயற்சியிலும் தடைகளைக் காண்கிறோம். நம்முடைய எந்த ஒரு புதிய முயற்சியையும் முதலில் நம்முடைய நண்பர்களோ, சுற்றத்தார்களோ, ஹவேண்டாம்' என்று கூறித் தடுப்பார்கள். 'உன்னால் முடியாது, இது சிரமமான காரியம்' என்று இகழ்ந்து பேச ஆரம்பிப்பார்கள். இதைத்தான் அனுமார் முதலில் சந்தித்தார், தாண்டினார். அடுத்து நாம் ஆரம்பிக்கும் காரியத்தில் கடவுளே சில சோதனைகளை வைத்துப் பார்ப்பார். இவன் கொண்ட உறுதியில் நிலையாக இருக்கிறானா என்பதே அந்தச் சோதனைக்கான காரணம். அதைத்தான் நாம், 'நேரம் சரி இல்லை', 'அதிர்ஷ்டம் இல்லை' என்றெல்லாம் கூறுகிறோம். இதை எல்லாம் தாண்டித்தான் முன்னேற வேண்டும். இரண்டாவதாக, தேவர்கள் அனுமானைச் சோதித்ததும் இப்படித்தான். மூன்றாவதாக நம்முடைய முன்னேற்றத்தால் உருவாகும் எதிரிகள் நம்மை நிலைகுலையச் செய்வார்கள். அதைப் பக்குவமாகக் கையாண்டு முன்னேற வேண்டும். அதைத்தான் அனுமானும் மேற்கொண்டார். இப்படி முன்னேறும் முயற்சியில் நாம் எதிர்கொள்ள இருக்கும் மூன்று தடைகளைத்தான் அனுமார், கடலைத் தாண்டிச் செல்லும்போது சந்தித்தார் என இராமாயணம் நமக்கு அறிவுறுத்தி உள்ளது. ஆகவே, புராணக் கதைகளை வெறும் சுவாரஸ்யக் கதைகளாக எண்ணாமல், அதில் உள்ள நமக்கான பாடத்தையும் கற்றுக்கொள்வோம். தடைகள் வர வரத்தான் நம் முன்னேற்றம் விரைவாகிறது என்பதை உணர்வோம், ஆக, தடைகள் வரட்டும் என்றே எண்ணுவோம். தடைகள் துன்பம் இல்லை. நமது வெற்றியை வழிநடத்தும் கைகாட்டிப் பலகை என்றே எண்ணுவோம்.




விஜய் சேதுபதி, கௌதம் கார்த்திக் இணைந்து நடிக்கும் படம் "ஒரு நல்ல நாள் பார்த்து சொல்றேன்". இந்தப் படத்தின் முதல் பார்வை அண்மையில் வெளியானது.

அதிக நிதிச் செலவில் உருவாகும் இந்தப் படம் முழுக்க முழுக்க நகைச்சுவைப் படமாக உருவாகியுள்ளது. இதன் முதல்பார்வையில் கௌதம் கார்த்திக் பயணம் செல்லும் இளைஞன் போலவும், விஜய் சேதுபதி எமன் போலவும் சித்திரிக்கப்பட்டுள்ளது.



ஹிந்தியில் கங்கனா ரணவத்தின் நடிப்பில் உருவான குயின் படம் பெரு வெற்றி பெற்றது. இந்தப் படம் பாரீஸ் பாரீஸ் என்ற பெயரில் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளத்தில் மீள் உருவாக்கம் செய்யப்படுகின்றது.

தமிழ், கன்னடம் மீள் உருவாக்கத்தில் காஜல் அகர்வால் நடிக்கிறார். தெலுங்கில் தமன்னாவும், மலையாளத்தில் மஞ்சிமா மோகனும் நடிக்கின்றனர்.

"குயின் படத்தை பலமுறை பார்த்திருக்கிறேன். படத்தின் கருத்தில் 100 சதவீத உடன்பாடு எனக்கு உண்டு. கங்கனா ரணவத்தின் நடிப்பை பிரதி பண்ணமால் எனது சொந்த ஸ்ரைலில் நடிப்பேன்" எனக் காஜல் கூறியிருக்கிறார்.

199
நடிகர்க
இருந்தவ
இடைெ
இப்போ
வுள்ளார்
"இங்கில்
பெயரிட்
மீனாட
சிங்கம்பு
ஆகியோ
குமார் இ
நகைச்சு
படமாக
இந்தப் ப
பேய்கள
விடுபவர்
வரும் ஒ
திகதி பட



நிக்கி கல்ராணி, கௌதம் கார்த்திக் நடிப்பில் உருவாகியுள்ள படம் ஹர ஹர மகாதேவகி.

இந்தப் படத்தை சூர்யாவின் நிறுவனமே தயாரிப்பதாக இருந்தது.

ஆனால் ஏ சான்றிதழ் படம் என்பதால் அதைத் தயாரிக்க அவர் மறுத்துவிட்டார்.

ஏ படத்தில் ஏன் நடித்தீர்கள் என நிக்கி கல்ராணியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது அவர் தடுமாறி விட்டார். பின்னர் "படத்தின் வசனங்களில்தான் ஏ வாடை இருக்கும். ஆடைக்குறைப்போ, ஆபாசமோ இந்தப் படத்தில் இல்லை" எனப் பதிலளித்திருக்கிறார்.



விஜய் ரீவியின் நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் சினிமா நட்சத்திரங்களாக அறிமுகமாவது அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

சிவகார்த்திகேயன், சந்தானம், மாக்காப்பா, ரோபோ சங்கரைத் தொடர்ந்து கலக்கப்போவது யாரு மூலம் பிரபலமான தொகுப்பாளினி ஜாக்குலின் அறிமுகமாகிறார்.

நயன்தாரா நாயகியாக நடிக்கும் கோலமாவு கோகிலா படத்தில்தான் இவர் அறிமுகமாகிறார். படம் முழுவதும் நயன்தாராவுடன் கதையில் இவர் வரவுள்ளாராம்.

விஜயின் மெர்சல் டீசர் உலகளாவிய சாதனை படைத்து வருகிறது. இந்நிலையில் அந்தப் படத்தின் விளம்பரத்தை நிறுத்த சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

காரணம் படத் தலைப்புத்தான். படத்தின் தலைப்பு ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட மெர்சலாயிட்டேன் படத்தலைப்புடன் ஒத்துப்போவதுதான் காரணம்.

மெர்சல் தலைப்புக்கு தடை விதிக்கப்பட்டால், அப்பெயரை வாங்கத் தயாரிப்பு குழு திட்டமிட்டுள்ளது.
அது சாத்தியப்படாது போனால் ஆளப்போறான் தமிழன் எனப் பெயரை மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளதாம்.




1990 களில் முன்னணி நடிகர்களுள் ஒருவராக இருந்தவர் ராம்கி. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இப்போது நாயகனாக நடிக்கவுள்ளார். படத்திற்கு "இங்கிலீஷ் படம்" எனப் பெயரிட்டுள்ளார்கள்.

மீனாட்சி, ஸ்ரீஜா, சிங்கமுத்து, சிங்கம்புலி, மதுமிதா, சஞ்சீவ் ஆகியோர் நடிக்க குமரேஷ் குமார் இயக்கவுள்ளார். நகைச்சுவை கலந்த திகில் படமாக இப்படம் உருவாகிறது. இந்தப் படத்தில் சிங்கம்புலி பேய்களை வாடகைக்கு விடுபவராக நடிக்கிறாராம். வரும் ஒக்ரோபர் 6 ஆம் திகதி படம் வெளியாகும்.

சிறுகதை

# புதியவன்

-மணியம்-

உடலிலோ வெயில் புழுக்கம், உள்ளத்திலோ வேதனைப் புழுக்கம். இந்த இரு புழுக்கங்களையும் தன்னடக்கிய என்னுடலைச் சுமந்து கொண்டிருந்தது அந்தச் சாய்மனை. நீட்டிய சட்டங்களில் காலைப் பின்னிப்போட்டுக் கொண்டு, உள்ளிழுத்த சிகரட் புகையை வெளியே தள்ளிக் கொண்டிருந்தேன். 'வட்டம் வட்ட' மாக, 'சுருள் சுருளா'க மேலேழுந்து செல்லும் அந்தப்புகை நெளிவுகளில் மனதிற்கு அமைதி தரும் ஏதோ ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தேன்.

'அமைதி', நான் 'கிட்டக்கிட்ட' செல்கிறேன். அது 'எட்ட எட்ட' விலகிச் செல்கிறது. தவறுதல் மனித இயல்பு. மேலும் தவறு செய்யாமல் பார்த்துக் கொள்வது மனித அறிவு. செய்த தவறை உணர்ந்து திருந்தி வாழ வேண்டும். அருமையான வாக்கியம். இதைத் தெரிந்தும் தவறினேன்.

பள்ளி வாழ்க்கையிலும் சரி, பிறவாழ்விலும் சரி 'கவலை' என்றால் என்ன எனத்தெரியாது வாழ்ந்த எனக்கு இது ஓர் சோதனையா? அல்லது தண்டனையா?

அது ஓர் கல்யாண வீடு. அன்றுதான் அவளைச் சந்தித்தேன். அவளை முன்பே தெரியும் ஆனால் சந்திப்பில்லை. இருவருக்கும் வேண்டியவர் வீட்டுத் திருமணம் அதனால் இருவரும் கதாபாத்திரங் களானோம். வந்த கடமைக்காக 'ஓடி ஆடிப் பணியாற்றினோம். அவ்வளவுடன் அது நின்றால்தானே அதுமேலும் தொடர்ந்தது. நினைவுக்கப்பால் சென்றது. சென்றேவிட்டது. பேசினோம்: கதைத்தோம்: சிரித்தோம்.

அவளுடைய 'குளு குளுப் பார்வை, கிளு கிளுப் பேச்சு, கல கல'ச் சிரிப்பு என்னைத் 'தளதள'க்கச் செய்தது.

ஒருவன் எத்தனையோ பெண்களைப் பார்க்கிறான். பேசுகிறான். எல்லோரோடும் அன்பாகப் பழகுகிறான். பொதுவாக அன்பு சிறப்பாக யாரோ ஒருத்தியிடம் காதலாக மாறுகிறது.

அவளைக் கண்டதும் நான் காதல் கொள்ளவில்லை. எங்களுக்கிடையில் ஏற்பட்டது காதலென்றும் நாம் சொல்லவில்லை. காரணம் அவள் இன்னொருவன் மனைவி அப்போது எங்களிடை இருப்பது...?

காதலோ? கத்தரிக்காயோ? எனக்குத் தெரியாது. ஆனால் ஏதோ ஒன்று இருக்கத்தான் செய்தது.

பிறன் தாரத்தை தாயெனவும், அந்நியர் மங்கையைச் சகோதரி போலவும் மதித்து நடக்க வேண்டும். பல நூல்களில் படித்திருக்கிறேன். கேட்டிருக்கிறேன்.

போதித்துமிருக்கிறேன். ஆனால் உணர்ச்சிக்கு அறிவு அடிமைப்படும் பொழுது அறிவுரைகள் தடைபோட முடியுமா?

காற்றும், சூரிய வெளிச்சமும் கிடைக்கப்பெறும் பண்பட்ட நிலத்தில் விதை முளைவிடுகிறது. ஆசை என்பதும் ஓர் விதை. சந்தர்ப்ப சூழ்நிலையைச் சாதகமாக வைத்து அது வளர்கிறது இதில் நாம் வேறா?

அன்றைய சந்திப்பு முதலும் முடிவுமாக இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும் என நான் சிந்தித்ததுண்டு. பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அதை நான் பயன்படுத்தவில்லை.

ஆனால் நான் விட்டாலும் அவள் விடுகிறவளாக இல்லையே? ஒருநாள் ஓரிடத்தில் தற்செயலாக என்னை அவள் கண்டுவிட்டாள். கண்டே விட்டாள். நான் கேட்டேன், மறுப்பில்லை. கேட்டுக்கொண்டே நின்றேன். ஏதோ பேசினாள். என்னென்னவோ சிந்தித்தேன். அல்ல மனித யந்திரமா?

சிந்தித்தேன் சிந்தித்தேன். முடிவு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும்படி கட்டளை வந்தது. நல்ல முடிவுகளுக்குக் காலை வாரிவிடும் சிந்தனை. கெட்டவைகளுக்கு துரித விரைவில் வருவதேன்? இப்போது துணிந்து விட்டேன் சீ.... துணிவா அது? ஒரு வெறி, பின் சொல்லவா வேண்டும். அவள் வீட்டில் நான். நிலவைக் கண்ட சந்திரகாந்தக் கல் நீரைப்பொழியுமாம். அவளைக் கண்ட என் இதயம் கசிந்து உருகியது. உடலிலோ என்ன நடுக்கம். இப்போது குளிர் காலம் அல்லவே.

போற்றி, போதும் என்ற மனம் பொருந்தி, மனம், வாக்குக் காயங்களினால் தூய்மையுடையவளாகப் பெண் இருக்க வேண்டும்' எனப் பெண் வர்க்கத்துக்கு மட்டுமல்ல அவளுக்கும் தான் உபதேசம் செய்தார் புத்தர்.

நடந்தது இனிமைதான். முடிந்தது வேதனை தான். என் மனம் ஏனோ அமைதி கொள்ளவில்லை. என் மனதைக் குடைவது என்ன? கடி எறும்பு கடித்த வேதனை உள்ளத்தில். எதற்கும் அவளிடம் நேரில் சென்று மன்னிப்புக் கேட்க வேண்டும் போல் எனக்குப்பட்டது.



நடை 'விறுவிறு'த்தது. சுவை கண்ட பூனை திரும்பியிருக்கிறது என அவள் நினைத்திருக்கிறாள் போலும். நினைக்கட்டும் ஆனால் என் நிலை இஞ்சிச் சாற்றுடன் விளக்கெண்ணை கலந்து மருந்து குடித்தவன் மாதிரி.

'இரவு நடந்தது நடந்துவிட் டது. தயவு செய்து மறந்து மன்னித்து விடவும். இத்துடன் எங்கள் உறவு நின்றால் அதுவே போதும்'. என் இருதயம் 'படபட'த்தது. நா 'தடதட'த்தது. குரல் 'கரகர'த்தது உடல் 'வியர்வியர்'த் தது அவளிடம் அலை கிடையா.

சர்வசாதாரணமாகப் பேசினாள். 'நீர் புதிசு, இரவுச் சம்பவம். நீர் நினைப்பது போல் பெரிய தவறல்ல. அப்படி நான் கருதவில்லை. இரவில் பயமுறுத்தும் இருள் பகலவனைக் கண்டதும் பறந்துவிடும்.

வீட்டுக்கு வரும்படி அழைத்தாள். மறுக்கமுடியாமல் பின் தொடர்ந்தேன். 'பேசிப் பேசி' சென்றுகொண்டிருந்தாள். நடந்து நடந்து பேசிக்கொண்டு சென்றாள். நடந்து கொண்டே கேட்டேன் முடிவு - என்ன பேசினாள் என்பது எனக்கே தெரியவில்லை. என் நெஞ்சில் அலை மோதியது. 'ஒன்றே ஒன்று தான். எதற்காக என்னை அழைக்கிறாள்?'

வீடு வந்தோம். ஏதோ நடந்தது. நடந்தேவிட்டது. விடைபெற்றேன்.

விடை தந்தாள். இன்னொன்றும் தந்தாள். நான் சொல்லவே மாட்டேன். எனக்கு வெட்கமாயிருக்கிறது.

நடந்தேன். நடப்பது நானா, உடல் தகித்தது. பிறர்பொருளைப் பறிப்போன் இவ்வுலகிலேயே தன் வேரைக் கிள்ளி எறிகிறான். அதேபோல் பிறன் மனைவியை இச்சிப்பதைப் போன்ற பேதமை உலகில் இல்லை. அட, புத்தரின் போதனை இந்த வேளையிலா?

வண்டு வருகின்றது. மலரில் அமர்கின்றது. உண்டு திரும்புகிறது. பெண்மையைக் காக்க வேண்டியவள், ஆண்மையைப் பேண வேண்டியவன், இருவரும் குற்றவாளிகள்.

'அகந்தையின்றி, அன்புள்ளவளாக, தாய்மைப்பண்பும், கற்பும் உடையவளாகக் கொண்ட கணவனையே தெய்வமாகப்

மறைந்துவிடும். நானோ அன்றிரவு - அதே நிமிடம் மறந்துவிட்டேன். எனக்கு நினைவில் இல்லை. இருளில் நடந்தது ஊம்.... ம்...... நீர் புதிசு' எனது மண்டை ஓடு கழன்று பறப்பதுபோல் இருந்தது. முடுக்கிவிட்ட பொம்மையைப்போல், நடந்துகொண்டிருந்தேன். நானும் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். காலத்தின் சுழற்சியில், ஆனால் ஒன்றுமட்டும் இன்னும் என் இதயத்தில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது. 'நீர் புதிசு'.



# இளமை அம்மாவின் 'காதல்' மகன்

குழந்தை ஒன்று இளமையான தனது தாயை 'சுப்பர் மம்மி" என அழைத்தவாறு ஓடி வரும். மம்மி...? என்ற ஆச்சரியக் கேள்வியுடன் விழிகளை உயர்த்துவர். இப்படி ஒரு விளம்பரம் இந்திய தொலைக்காட்சிக-ளில் நமக்குப் பழக்கமானதுதான். ஆனால் இந்த சவர்க்காரம் இல்லாமலே நமது விழிகளை உயரச் செய்கிறார் சீனாவின் லியூ யெலின்.

விளம்பரத்தில் வருவது போன்று சிறு குழந்தையின் தாயல்ல இவர், 22 வயது இளைஞரான ஸீ யிக்ஷூனின் அம்மாதான் லியூ யெலின். அவரின் வயது 50. 'உலகிலேயே இளமைமிக்க அம்மா என்றால் அது என் அம்மாதான்" எனத் தொடங்குகிறார் யிக்ஷூன்.

பீஜிங் நகரில் திரைப்பட நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகிறார் ஸீ. ஒவ்வொரு மாத இறுதியிலும் ரயிலில் 5 மணி நேரம் பயணித்து தாயை சந்திக்க வந்துவிடுவார். ஏரிக் கரை, பீச், ரெஸ்ரோரண்ட் என இருவரும் ஜோடியாக சுற்றுவர். விடுமுறை நாள்களிலும் உடற்பயிற்சிக்கு விடுமுறை இல்லை. இருவரும் இணைந்தே செய்வராம்.

'16 வயது வரைதான் அவர் எனது தாயாக இருந்தார். அதன் பின்னர் என் நண்பராகவே இருக்கிறார். என்னுடன் படித்த நண்பர்கள் பலருக்கு அவர் என் தாய் எனத் தெரியாது. என் தங்கை என்றே நம்பினர்" என்கிறார் ஸீ.

'அழகுக்காக நான் எதையும் ஸ்பெஷலாகச் செய்வதில்லை. நீச்சல் என்றால எனக்கு உயிர். ஏரியை எங்கு கண்டாலும் குதித்து நீந்த ஆரம்பித்துவிடுவேன். எனது அழகிய உடல் அமைப்புக்குப் பிரதான காரணம் நீச்சல்தான். நீச்சலுடன், தினமும் 12 கிலோமீற்றர் தூரம் ஓடுகிறேன். எல்லாவற்றிலும் விட எனது இளமையின் இரகசியம் தன்னம்பிக்கைதான்" என்கிறார் யெலின்.

'நானும் எனது மகனும் வெளியில் சென்றால், எங்களைப் பார்ப்போர் சகோதரன், சகோதரி என்றே நினைக்கின்றனர். சிலர் காதலர்கள் என்று எண்ணுகின்றனர். ஒருமுறை கடற்கரையில் நாங்கள் நின்றபோது எங்களை காதலர்கள் என்று எண்ணிய பெண் ஒருவர் தாறுமாறாக ஏச ஆரம்பித்தார். அவரிடம் நான் விளக்க முயன்ற போது அவர் அதைக் கேட்பதாக இல்லை. அவர் என் அம்மா... என என் மகன் கத்திச் சொன்னபோது அதிர்ச்சியாக அந்தப் பெண் எங்களைப் பார்த்தார். பின்னர் மன்னிப்புக் கேட்டுவிட்டு சென்றார்.

நீச்சலுடையை அணிவதையே நான் விரும்புகிறேன். அப்போதுதான் என் முன், பின் அழகு தெரியும். என் அழகை வெளிப்படுத்துவதை சிலர் தவறாகப் பார்க்கின்றனர். அழகு என்பதே வெளிப்படுத்துவதற்குத்தானே. என் மகனும் நான் நீச்சலுடைகளை அணிவதையே விரும்புகிறான்" என்ற யெலின் தனது ஆசைகள் என கூறுவது என்ன தெரியுமா? என் மகனைப் புரிந்து கொண்ட அழகான பெண் அவனுக்கு கிடைக்க வேண்டும். 80 வயது வரை இதே இளமையுடன் இருக்க வேண்டும் என்பதுதானாம்.

ஆசைகள் நிறைவேறட்டும்...!

# அரச காலத் திருமணம்

இளவரசன் - இளவரசி திருமண கதைகள் பற்றி படித்திருப்போம் - அறிந்திருப்போம். அந்தத் திருமணங்களை கற்பனையில் பார்த்து வியப்பில் விழித்திருப்போம். ஆனால் அந்தக் கற்பனைக்கு உயிர் கொடுத்திருக்கிறது ஒரு ஜோடி.



ரெக்ஷா பன்ஜி ரியாபன் (28) - சிஸ்ரா மௌலி வுலாந்தரி (27) ஜோடிதான் அந்தக் கற்பனைக்கு உயிர் கொடுத்திருப்பது. பிரிட்டனில் கல்வி கற்ற இருவரும் இந்தோனேஷியாவை சேர்ந்தவர்கள். ஆரம்பத்தில் படிப்பில் மட்டுமே ஆர்வம் செலுத்தியவர்கள். படிப்பு முடிந்த பின்னர் கல்லூரி நிகழ்வொன்றில் சந்தித்து காதலைப் படிக்கத் தொடங்கினர்.

அரச கதைகளில் பெரும் நாட்டம் கொண்ட இருவரும் அரசர்களைப் பற்றிய நாவல்களின் தீவிர வாசகர்களா-கவும் இருந்தனர். திருமண பந்தத்தில் இணையத் தீர்மானித்த இருவரும் இஸ்லாமிய சடங்குகள் முடிந்த பின்னர். தங்களின் விருப்பம் போன்று அரச உடை அணிந்து திருமணம் செய்து கொண்டனர். மணமக்கள் பூங்கொத்துகளை வீசுவதற்குப் பதிலாக வில்லில் இருந்து அம்பை எய்தனர். திருமணத்துக்கு 600 விருந்தினர்களை அழைத்தார்கள். அழைப்பிதலும் பொற்காசு பொறிக்கப்பட்டு, வித்தியாசமானதாக இருந்தது. பிரிட்டனில் திருமணத்தை நடத்தினால் அதிக செலவாகும் என்பதால், சொந்த நாடான இந்தோனேஷியாவிலேயே திருமணத்தை



# இந்தக் காலத்தில் இப்படியுமா...?

தலையிடியை மட்டுமல்ல புற்றுநோயையும் ஸ்ரார் மஜிக் குணப்படுத்தி விடுவேன் என்கிறார் ஜெர்ரி சர்கியான்ட். பிரிட்டனை சேர்ந்த இவர் தன்னிடம் சிகிச்சை பெற வருபவர்களிடம் 15 நிமிடத்துக்கு 18 ஆயிரம் ரூபா வாங்குகிறார். இவரிடம் சிகிச்சை பெறுபவர்கள் 3 மாதங்கள் சிகிச்சை பெற்றாக வேண்டும். இதனால் அவர் ஒருவரிடம் இருந்து 10 இலட்சம் ரூபாவை கறந்து விடுவார்.

ருமேனியாவுக்கு சென்றிருந்த இவர், கார் விபத்தில் இரு பெண்களின் மரணத்துக்கு காரணமாக இருந்தார். அந்தப் பெண்களின் ஆவி இவரின் உடலுக்குள் நுழைந்ததால் நோய்களை குணமாக்கும் சக்தி தனக்கு வந்ததாக கூறுகிறார் சர்க்கியன்ட். தன்னால் குணப்படுத்தவே முடியாது எனக் கூறும் நோய்களே இல்லை என்க் கூறும் இவர் ஹிப்னாடிசம் மூலம் சிகிச்சைக்கு வருபவர்களை மயக்கமடைய வைக்கிறார். அதன் பின்னர் அவர்களை குணப்படுத்தி விட்டதாகக் கூறுகிறார். இவரிடம் சிகச்சை பெற்றவர்களும் தாங்கள் முன்னரை விட நன்றாக இருப்பதாகக் கூறுகின்றனர்.

பிரபலமான சர்க்கியன்ட்டின் புகழ் வளர்ந்ததால் தொழில் கொடி கட்டிப் பறந்தது. கோடிகள் புரளத் தொடங்கின. ஆனால் மருத்துவம் கற்காமல், சிகிச்சை வழங்குகிறார் என அவரைக் கைது செய்த இங்கிலாந்து பொலிஸார் அவரை சிறையிலடைத்தனர். பிணையில்கூட அவரால் வெளியில் வர முடியவில்லை.


இந்தக் காலத்தில் இப்படி ஏமாற்றினால் நம்பிவிடுவதா?



# கடல் உயிர்களை காக்கும் அற்புத மனிதர் லிய்பர்

அதிகாலை நேரத்தில் அந்த ஆறு பேரும் கடற்கரையில் வந்து நிற்கிறார்கள்.
"இன்னும் லிய்பர் வரவில்லையா? "
"இல்லையே... அவன் என்ன ஆனாலும், காலையில் நமக்கெல்லாம் முன்னாடியே வந்திடுவானே! "
"அது ஒன்னுமில்ல... கிழவனுக்கு வயசாயிடுச்சுல்ல, அதான் கப்பலிலேயே படுத்து தூங்கிட்டிருக்கும். போய் பார்க்கலாம் வா..."
அந்த ஆறு பேரும் கப்பலுக்குள் குதிக்கிறார்கள். அந்தக் கிழவரைத் தேடுகிறார்கள். அப்போது திடீரென கப்பல் ஸ்ரார்ட் ஆகி, வேகமாக ரிவர்ஸில் போகிறது. அனைவரும் நிலைத்தடுமாறி கீழே விழுகிறார்கள். கிடைக்கும் பிடிகளைப் பிடித்துக் கொண்டு, ஆளுக்கொரு பக்கமாக உட்காருகிறார்கள்.
"அப்பவே சொன்னேன், அவனை நீ கிழவன்னு சொல்லாதே... கேட்டியா? இப்ப பாரு அந்தக் கிழவனோட வேலைய..."
"ஐயோ...."
பெரும் அலையில் அத்தனை வேகமாகப் பாய்ந்தது அந்தக் கப்பல்.
'டேய்... லிய்பர். .. மன்னிச்சிடு. சரி, சரி... நீ கிழவன் இல்லைதான்" என்று அவர்கள் சொல்லவும் கப்பல் சற்று மெதுவாக போகத் தொடங்குகிறது.
இன்ஜின் அறையில் இருந்து வெளிவருகிறார் கேர்ட் லிய்பர் (Kurt Lieber).
"நண்பர்களே... இன்றைக்கு கடல் கொஞ்சம் கொதிப்பா இருக்கு. கவனமா நீச்சலடிங்க என்று சொல்லி விட்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்.
வெளிச்சம் மெதுவாகப் படரத் தொடங்கியதும், ஒவ்வொருவராக கடலில் குதிக்கிறார்கள்.
ஒரு மணி நேரம் கழிகிறது. கப்பலின் ஒரு மூலையில் உட்கார்ந்து கடலையே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார் லிய்பர். ஒரு சிவப்பு நிற பலூன் சட்டென்று கடலிலிருந்து வெளிப்பட்டு மிதக்கிறது. அதைக் கப்பலை நோக்கி இழுக்கிறார். கூடவே, கடலுக்குள் போனவர்களும் வெளியே வருகிறார்கள். அனைவரும் கப்பலில் ஏறுகிறார்கள். அந்த சிகப்பு நிற பலூனை அனைவருமாக பிடித்து தூக்குகிறார்கள். அதன் கீழே ஒரு பெரிய இரும்புக் கூண்டு இருக்கிறது. அதை இழுத்து அதில் சிக்கியிருக்கும் நண்டுகளையும், இறால்களையும் விடுவிக்கிறார்கள். இந்த விடயங்கள் எல்லாம் நடப்பது அமெரிக்காவின், கலிபோர்னியா மாகாணத்தில் இருக்கும்





ஹண்டிங்டன் கடற்பகுதியில். 1970களிலிருந்தே ஆழ்கடல் நீச்சல் வீரராக இருந்து வருபவர் கேர்ட் லிய்பர். காலங்கள் மாற, கடல் பெருமளவு மாசுபடுவதை உணர்கிறார். குறிப்பாக, கடலில் மீன் பிடிக்கப் போகும் மீனவர்களின் வலைகள் சில சமயங்களில் அறுந்து கடலிலேயே தங்கிவிடுகின்றன. அவை பல உயிரினங்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக நண்டுகளையும், இறால்களையும் பிடிக்க பெரிய கூண்டுகளைக் கடலுக்கடியில் அனுப்புவார்கள். சமயங்களில் கப்பலுக்கும், கூண்டுக்குமான கயிறு அறுந்துவிடும், பலத்த காற்றினால் அந்தக் கூண்டு பல திசைகளுக்கு மாறிப்போவதும் உண்டு. இதைத் தேடி எடுப்பது மீனவர்களுக்கு மிகவும் கடினமான வேலை என்பதால், அதை அப்படியே விட்டுவிட்டு கரைக்குத் திரும்பிவிடுவார்கள்.
ஒரு வருடத்தில் உலகம் முழுக்க இது போன்ற கூண்டுகளும், மீன்பிடி வலைகளுமாக 3 லட்சத்து 60 ஆயிரன் தொன் அளவிற்கு சேர்கின்றன. இதனால் பல லட்ச கடல் உயிரினங்கள் உயிரிழக்கின்றன. கடலுக்கடியில் இருக்கும் ஒரு நைலோன் வலை அழிய 650 வருடங்கள் ஆகும். இந்த வலைகள் மற்றும் கூண்டுகளினால் அமெரிக்காவில் வருடத்திற்கு சராசரியாக 10-லிருந்து 15 திமிங்கலங்கள் சிக்கி உயிரிழக்கும். ஆனால், கடந்த நான்கு வருடங்களாக இந்த எண்ணிக்கைத் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்தாண்டு 72 திமிங்கலங்கள் இந்த வலைகளில் சிக்கி உயிரிழந்தன.
இந்தப் பிரச்னைகளைக் களைய தன்னால் இயன்ற முயற்சிகளை செய்ய வேண்டும் என்ற நோக்கில் 2000 ஆம் ஆண்டு "பெருங்கடல் பாதுகாப்பாளர்கள் கூட்டியக்கம்" (ழுஉநயெ னநகநனெநசள யுடடயைெஉந) எனும் இயக்கத்தைத் தொடங்கினார் லிய்பர். முதலில் 6 நண்பர்கள் மட்டுமே அவரோடு கைகோர்த்தனர். ஆரம்பத்தில் அது அத்தனை எளிதான காரியமாக இருக்கவில்லை. கடலின் ஏதாவது ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து அதிற்குள் சென்று இதைத் தேடிப் பிடித்து எடுப்பது மிகவும் சிரமமான விஷயமாகவே இருந்தது. அந்த சிரமம் இன்று வரையிலும் தொடர்கிறது. ஆனால், இன்று அவர்கள் 6 பேர் மட்டுமே அல்ல. இந்தக் குழுவில் இன்று 200 பேர் இருக்கின்றனர். அமெரிக்காவின் பலதரப்பட்ட கடற்பகுதிகளில் தங்கள் வேலைகளைச் செய்து வருகிறார்கள். தான் செய்யும் இந்த முன்னெடுப்புகள் குறித்து இப்படிச் சொல்கிறார் லிய்பர்...
"ஒவ்வொரு நாளும் இந்தக் கடல் அரக்கர்களிடம் சிக்கி எத்தனையோ உயிரினங்கள் இறக்கின்றன. அதில் சிலவற்றையாவது காக்க வேண்டும் என நான் நினைக்கிறேன். நான் செய்வது ஏதோ உலக சாதனை எல்லாம் கிடையாது. நான் பெரிய புரட்சி செய்துவிட்டேன் என்றும் நான் சொல்லவில்லை. ஆனால், ஒரு மிகச் சிறிய மாற்றத்திற்கு நான் வித்திட்டிருக்கிறேன். இது என் கடமை. இப்படி ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை இருக்கிறது. இந்த வேலை கொஞ்சம் கடினமானதுதான். ஆனால், அந்தக் கூண்டில் சிக்கியிருக்கும் ஒரு உயிரைக் காப்பாற்றியதும், அது அத்தனை மகிழ்ச்சியோடு நீந்திப் போவதைப் பார்க்கும் போது எல்லா கஷ்டங்களும் மறைந்துவிடும்..."



# உலகில் அக்கறையை தொலைக்கும் ஜேர்மனி

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி என மக்கள் தொகை மிகுந்த மூன்று ஐரோப்பிய நாடுகளுக்கும் இது தேர்தல் ஆண்டு. இந்தத் தேர்தல்கள் அந்த நாடுகளுக்கு மட்டுமில்லாமல் ஐரோப்பாவுக்கும், உலக அரசியல் போக்குகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. எந்தக் கட்சிக்கு எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைத்தது, அல்லது எவ்வளவு சதவீதம் பேர் ஆதரவாக வாக்களித்தனர் என்பதைவிட, இந்தத் தேர்தல் பிரச்சாரங்களில் என்ன பேசப்பட்டது என்பதுதான் முக்கியம்.

பிரெஞ்சுக் குடிமகளான நான் இப்போது லண்டனில் வசிக்கிறேன். பிரிட்டனில் ஜூன் மாதம் நடந்த தேர்தல் பிரச்சாரத்தின்போது 'பிரெக்சிட்' குறித்து ஏன் அதிகம் பேசவில்லை என்று புரியாமல் தவித்தேன். வரலாற்று முக்கியத்து வமும், வரலாற்று ரீதியாக விளைவுகளை ஏற்படுத்த வல்லவையுமான ஒரு விடயம் குறித்து எப்படி தேர்தலில் விவாதிக்காமல் ஒதுக்க முடிகிறது? இது குறித்து 'கார்டியன்' பத்திரிகைத் தோழர்களிடம் வினவினேன். அவர்கள் சொன்ன பதில் வியப்பை ஏற்படுத்தியது. "2016 இல் நடந்த கருத்தறியும் வாக்கெடுப்பின்போதே 'பிரெக்சிட்' குறித்துத் தீவிரமாக விவாதித்து அனைவருக்கும் மனம் புண்ணாகி விட்டது. வாக்கெடுப்பு முடிவு மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த மனப்புண் ஆற, நாடு தன்னுடைய எல்லைக்குட்பட்ட விவகாரங்களைப் பற்றி மட்டும் பார்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டது" என்றனர்.

ஜேர்மனியிலும் உள்நாட்டு விவகாரங்களைப் பற்றி மட்டும் பார்க்கும் போக்கைக் கண்டு வியந்தேன். ஜேர்மனியின் தேர்தல் பிரசாரத்தில் ஐரோப்பாவைப் பற்றிய பேச்சே இடம்பெறவில்லை. பிறகு, உலகம் பற்றி எங்கேயிருந்து பேசுவது? ஜேர்மன் தேர்தல் முடிவுகள், அலக அளவில் விளைவுகளை நிச்சயம் ஏற்படுத்தும். ஐரோப்பிய ஒன்றியத்தின் பிற நாடுகளைவிட ஜேர்மனியில்தான் அதிகம் பேர் தங்களை 'மையவாத கருத்துள்ளவர்கள்' என்று கூறிக்கொள்கின்றனர். பிற நாடுகளில் வலது அல்லது இடது சித்தாந்தங்களை ஆதரிப்பதைப் போலத் தாங்களும் செய்ய ஜேர்மானியர்கள் விரும்பவில்லை.

ஜேர்மனியில் கடந்த 24 ஆம் திகதி நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் ஏஞ்சலா மெர்க்கலே வென்றுள்ளார். நான்காவது தடவையாக பதவியேற்கும் ஏஞ்சலாவை ட்ரம்ப், புதின், எர்டோகன், வட கொரிய ஜனாதிபதி போன்ற விவகாரமான அரசியல் தலைவர்களுடன் ஒப்பிடுகையில் நல்லவர், உலக வம்புக்குப் போவதில்லை, உள்நாட்டு விவகாரங்களில் அதிக கவனம் செலுத்துகிறார் என்பதே ஜேர்மான் வாக்காளர்களின் பரவலான கருத்தாக இருக்கிறது. உலகின் பிரச்சினைகளைக் கேட்பதிலோ அவற்றைத் தீர்ப்பதிலோ ஜேர்மனியர்களுக்கு ஆர்வம் இல்லை. ஏஞ்சலாவின் 'கிறிஸ்டியன் டெமாக்ரடிக் யூனியன்' (சி.டி.யு.) கட்சி, தங்களுக்கு வாக்களித்தால் அனைவருக்கும் நல்வாழ்வு என்று உறுதியளித்திருக்கிறது. அதுபோதும் அவர்களுக்கு!

பட்டவர்த்தனமாகச் சொல்வதானால் பிரித்தானியர்கள் தங்களுடைய தேவையிலேயே குறியாக இருப்பார்கள். ஜேர்மனியர்களும் அப்படியே. காரணம், அவர்கள் இப்போது சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பாவிலேயே அவர்களுடையது தான் பெரிய, பணக்கார, மிகுந்த வலிமை வாய்ந்த நாடு. ஐரோப்பிய நாடுகளிலேயே அரசியல் ஸ்திரத்தன்மை அதிகம் உள்ள நாடும் அதுவே. எனவே பிரித்தானியர்களைப் போலவே - ஆனால் வேறு காரணத்துக்காக உலக விவகாரங்களிலிருந்து



விலகி விடுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் 'பிரெக்சிட்' குறித்து ஜேர்மன் வாக்காளர்களும் அக்கறை காட்டவில்லை.ஜேர்மன் அரசியல்வாதிகளும் முழுதாகப் புறக்கணித்துவிட்டனர்.

பிரான்ஸ் குறித்து இங்கே ஒரு வார்த்தை: பிரிட்டன், ஜேர்மனி நாடுகளைப் போல் அல்லாமல் பிரான்ஸ் விதிவிலக்கு. ஐரோப்பிய விவகாரம் முக்கியத்துவம் தந்து விவாதிக்கப் பட்டது. ஐரோப்பாவைக் கொண்டாடினார் இமானுவேல் மெக்ரன். முழு ஐரோப்பாவையும் ஒரு கட்டமைப்பாகக் காணும் பிரெஞ்சுக்காரர்களின் உணர்வுகளுக்கு அவர் மதிப்பளித்தது தான் அவரது வெற்றிக்கு முக்கியக் காரணம். ஐரோப்பாவில் பிரான்ஸுக்கு மிகப் பெரிய இடம் ஒன்று இருப்பதை அவர் நினைவூட்டினார். பிரெஞ்சுக்காரர் களுக்குப் புதிதாக ஏற்பட்டிருக்கும் நாட்டுப்பற்றுக்கு இணையாக ஐரோப்பாவை அவர் உயர்த்தினார்.

### வரலாற்றுப் பாடம்

ஜேர்மனியில் நிலைமை பிரிட்டனைப் போலவே இருந்தது. பெர்லின், லீப்சிக், மியூனிக் ஆகிய நகரங்களில் அதிகாரிகளை, நாடாளுமன்ற உறுப்பினர்களை, உள்ளாட்சிமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினேன். 'றொபேர்ட் பாஷ்' அக்கடமி இந்தத் தேர்தல் பயணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் காலத்தில் ஜேர்மனி வகிக்கக்கூடிய தலைமைப் பதவி குறித்துப் பேசப்பட்டது. "பிற நாடுகள் ஜேர்மனியிடம் எதிர்பார்ப்பதாகக் கூறப்படும் கருத்துகள் மிகையாக உள்ளன. நாம் தன்னம்பிக்கையுடன் இருக்கிறோம், ஆனால் உலக விவகாரங்களில் தலையிட்டுத் தீர்க்கும் ஆர்வம் இல்லை. வரலாறு நமக்கு உணர்த்திய பாடம் நினைவிலிருக்கிறது".

"ட்ரம்ப் தொல்லைப்படுத்து கிறார்தான், அதற்காக உலக நாடுகளுக்குத் தலைமையேற்பது நம்முடைய தகுதிக்கு மீறியது" என்கிறார்கள். பலரும் எதிர்பார்த்த தற்கு மாறாக 2015 இல் ஏற்பட்ட அகதிகள் நெருக்கடி, ஜேர்மனியின் தேசிய அரசியலை மாற்றி விடவில்லை. பிரிட்டனில் அது பிரெக்சிட்டுக்கு வழிவகுத்தது. பிரான்ஸில் லீ பென் ஒரு கோடி வாக்குகளைப் பெற முடிந்தது. 2015-ல் ஏராளமான அகதிகள் ஜேர்மனிக்குள் வந்தனர். 2 ஆண்டுகள் கடந்த பிறகும் ஜேர்மனி அதுகுறித்து ஏதும் அலட்டிக்கொள்ளவில்லை, அதை விரும்பவோ, விவாதிக்கவோ கூட ஜேர்மானியர்கள் விரும்பவில்லை. "அகதிகள் விடயத்தில் நாங்கள் செய்தது பெருமைக்குரியது. அகதிகளை எங்கள் நாட்டு பண்புப்படி வரவேற்று உபசரித்தோம், ஆனால் மீண்டும் அகதிகள் வருவதை விரும்பவில்லை" என்றும் கருத்து தெரிவித்தனர்.

இனி நடைபெறவுள்ள தேர்தலில் வலதுசாரி கட்சியொன்று வலுவாகப் போகிறது. ஜனநாயகத்துக்கு மாற்று என்ற பெயருள்ள வலதுசாரிக் கட்சி தேர்தலில் போட்டியிடுகிறது. கிழக்கு ஜேர்மனியில் அதற்கு ஆதரவு கிடைக்கலாம். 1990-ல் இரண்டு ஜேர்மனிகளும் இணைந்த பிறகு பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்பட்டுவிடவில்லை. அகதிகளைக் கொண்டுவந்து மறுவாழ்வு அளிப்பதைவிட, முன்பு கிழக்கு ஜேர்மனி என்றும் மேற்கு ஜேர்மனி என்றும் பிரிந்திருந்த எங்களிடம் முதலில் ஒற்றுமையை ஏற்படுத்துங்கள் என்று மக்கள் கேட்கின்றனர்.

### ஒற்றுமையின் அவசியம்

2015 இல் ஜேர்மனி தன்னுடைய மனிதாபிமானத்தை வெளிப்படுத்தியது. அதே சமயம் ஜேர்மனியர்கள் அனைவரும் அப்படியே தொடர்ந்து தங்கள் நாடு அகதிகளை ஏற்க வேண்டும் என்று விரும்பி விடவில்லை. ஐரோப்பாவுக்கோ உலகுக்கோ ஜேர்மனி தலைமை யேற்பதை அவர்கள் விரும்பவில்லை. தன்னுடைய அரசியல் கொள்கைகளையும் உருவத்தையும் காலத்துக்கேற்ப மாற்றிக்கொள்ளும் ஏஞ்சலா, மக்களுடைய உணர்வுகளுக்கு ஏற்ப கருத்துகளையும் கொள்கையையும் மாற்றிக்கொண்டு விட்டார். தன் விவகாரத்தில் மட்டும் ஜேர்மனி அக்கறை செலுத்தினால் அது ஐரோப்பாவுக்கே ஆபத்தாக முடியும். பிரெக்சிட், ட்ரம்ப், ரஷ்யா, துருக்கி, பால்கன் நாடுகள், ஆபிரிக்கா, சீனா, பருவ நிலை மாறுதல், அகதிகள் இடப்பெயர்வு ஆகிய பிரச்சினைகளை ஐரோப்பிய நாடுகள் ஒற்றுமையாக இருந்து எதிர்கொள்ள வேண்டும். எல்லா நாடுகளிலும் அரசியல் என்பது உள்நாட்டு விவகாரங்களுக்குத்தான். வெளிநாட்டுத் தொல்லைகளிலிருந்து ஏஞ்சலா காப்பாற்றுவார் என்று நம்புவதால் ஜேர்மானியர்கள் அவருக்கு மீண்டும் ஆதரவு தருவர். ஐரோப்பாவையோ உலகத்தையோ மாற்றுவது அவர்கள் நோக்கமல்ல. விதிகளை மதிக்கத் தெரிந்த ஜேர்மானியர்கள் தங்கள் நாட்டு எல்லை தாண்டி ஆற்ற வேண்டிய முக்கிய கடமை எதுவுமில்லை என்றே நினைக்கிறார்கள்.

## ஆட்டம் காணும்... (02ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித்திரை 2016 ஆம் ஆண்டின் பெறுபேறுகளையும், சித்திரை 2017 ஆம் ஆண்டின் பெறுபேறுகளையும் ஒப்பிட்டு பார்க்கும்போது, ஏற்றுமதியில் விவசாயத்துறையின் பங்களிப்பானது 11.9 வீதமாக அதிகரித்துள்ளது. அதுபோல, இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், அச்சிடும் தொழில் தயாரிப்புகள் மற்றும் காகிதத் தயாரிப்பு ஏற்றுமதி மூலமான வருமானமும் 2017 இல் அதிரித்துள்ளது நற்செய்தியாகவே உள்ளது.

ஏற்றுமதியில் மேற்கூறியவாறு, விவசாயத்துறையின் பங்களிப்பானது அதிகமாக இருப்பதற்கு மிகமுக்கியமான காரணிகளில் ஒன்று தேயிலையின் சந்தை விலையில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான அதிகரிப்பும் ஒரு முக்கியமான காரணியாக பார்க்கப்படுகிறது. ஆனால், ஏற்றுமதி செய்யப்படும் அளவை கடந்த காலங்களுடன் ஒப்பீடு செய்து பார்த்தோமானால், அதன் அளவானது குறைவடைந்திருக்கிறது. அதுபோல, கடல்வாழ் உயிரினங்களின் ஏற்றுமதியானது கடந்தகாலங்களுடன் ஒப்பிடும் போது 57 வீதமாக உயர்வடைந்துள்ளது. இதற்கு பிரதான காரணமாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக சலுகை கிடைக்கப் பெற்றமையை சொல்ல முடியும்.

இவற்றின் தொகுப்பாக நமது நாட்டின் 2017 ஆம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி எத்தகைய நிலையை நோக்கி நகருவதாக உள்ளது என பார்த்தோமானால், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து சிறந்த வளர்ச்சி நிலையையும், ஆனால் திட்டமிடப்பட்டு அடையப்படும் என எதிர்பார்க்கப்படும் இலக்குக்கு குறைவான வளர்ச்சியையும் கொண்டதாக காணப்படும். காரணம், பொருளாதார வளர்ச்சியில் விவசாய உற்பத்தியானது ஒரு சிறிய விகிதத்தை மட்டுமே பங்களிப்பதாக உள்ளமையும், எதிர்பார்த்ததைவிட மந்தகதியில் வளர்ச்சி அடையும் உற்பத்திதுறையையும் நோக்கி கைகாட்ட முடியும்.

இவற்றுக்கு மேலதிகமாக, பொருளாதார வளர்ச்சியில் பெரிதும் பங்களிப்பு செய்யும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குளறுபடிகள் காரணமாக, மிக அதிகளவில் பாதிக்கப்பட்ட ஒன்றாக மாறியுள்ளது. இது இலங்கை மீதான முதலீட்டாளர்களின் நம்பிக்கைதன்மையானது கொஞ்சம் கொஞ்சமாக குறைவடைந்து செல்வதனையே காட்டி நிற்கிறது. இவை அனைத்தையும் நிவர்த்திக்க வேண்டிய அவசர சூழலில் இலங்கை அரசும், அதன் நிதி நிர்வாகமும் உள்ளது. இல்லையெனில், நாம் மீண்டும் மீண்டும் நமது பொருளாதாரத்தை வளர்த்தெடுக்க ஏனைய நாடுகளிடம் கையேந்தும் மோசமான நிலையைத்தான் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

## சடங்கின் அடையாளமல்ல... (21ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது இலங்கையில் மாவீரர் தினம் அனுஷ்டிப்பதற்கோ தியாக திலீபனின் தினம் அனுஷ்டிப்பதற்கோ நேரடியாக எந்த நெருக்குவாரங்கள் இல்லாது அதை அனுஷ்டித்ததன் அடிப்படையிலானது அல்ல. 2015 வரையான சூழலில்தான் மாவீரர் துயிலுமில்லங்களில் திரண்டு சென்று விளக்கேற்றுகின்ற முயற்சி தியாகி திலீபனை திரண்டு அனுஷ்டிக்கின்ற முயற்சி தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் அதன்பால் எழுகின்ற எதிர்வினைகள் தமிழர் பிரச்சினை தொடர்பான மேலும் வலுவான செய்திகளை சர்வதேச அரங்கில் கொண்டு சேர்த்திருக்கும். அதை நாம் தவறவிட்டிருக்கின்றோம்.

இன்று சடங்கு மனப்பான்மையின் ஊறி வந்திருக்கின்ற எங்கள் சமுதாயத்துக்கு இத்தகைய நினைவேந்தல் மன ஆறுதலை தரும் என்பது உண்மையெனினும், இதுவரை எழுபது ஆண்டுகளாக தமிழர்கள் போராடி வருகின்ற இலக்கிற்கு எந்த அடிப்படையில் துணையாகின்றது. திலீபனின் முப்பதாவது வருடம் மிக முக்கியமான சர்வதேச சூழலை தமிழ் மக்களும் இலங்கை அரசாங்கமும் எதிர்கொண்டுள்ள சூழலில் திலீபனின் நினைவேந்தல் ஏன் வெகுஜன வடிவமாக மாற்றப்படவில்லை.தேர்தல் பிரசாரக்கூட்டங்களுக்கு நல்லூர் திருவிழாவுக்கும் வடக்கு மாகாண பிரச்சினைக்கும் திரண்ட கூட்டத்தோடு ஒப்பிடும்போது நல்லூரில் திலீபனுக்காக கூடிய கூட்டம் எத்தனைபேரைக் கொண்டது என்பதை நாம் கணக்கிட்டுப்பார்த்து பெறக்கூடிய செய்தி என்ன.

இந்த நாட்டில் ஒரு அரசியல் யாப்பு உருவாக்கப்படுகின்றது. அந்த அரசியல் யாப்பு தமிழர்களுக்கு எதை தரப்போகின்றது. அது இதுவரை போராடிய தமிழர்களின் இழப்புக்கும் வலிக்கும் ஈடானதா தமிழ் மக்களின் எண்ணங்கள் எதிர்பாப்புக்களை அந்த அரசியல் யாப்பு திருப்தி செய்கின்றதா என்ற கேள்விகளை மக்கள் சிந்திக்க வேண்டிய முக்கிய காலகட்டம். தமிழர்களுக்கு தீர்வற்ற ஒரு அரசியல் யாப்பை நாம் பலமிழந்தவர்கள் - எங்களிடம் ஆயுதங்கள் இல்லை என்ற மனப்பாங்கின் அடிப்படையில் ஒரு திணிப்பாக ஏற்றுக்கொண்டால் இன்னும் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு மீளமுடியாத குழியில் விழுந்து விடுவோமா என மக்கள் ஆழமாய் சிந்திக்கவேண்டிய காலம் இது. ஆகவே எமக்குப் பொருத்தமற்ற ஒன்றை திணிப்பை நிராகரிக்க எங்கள் கையில் உள்ள பெரிய ஆயுதம் திலீபன். அது சடங்கின் வடிவமல்ல அது நேற்றோடு முடிந்துவிடும் திலீபன் புரட்சியின் வடிவம்.

## அணையாது எரியும்... (06ஆம் பக்கத் தொடர்ச்சி)

2009 ஆம் ஆண்டு மேமாதம் நடைபெற்ற இறுதிச் சமரில் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாகச் சொல்லிக் கொண்டது ஸ்ரீலங்கா இராணுவம். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை முள்ளிவாய்க்காலிலே போராட்டம் முற்றுப்பெற்றதாக இல்லை. போராட்ட வடிவம் மாறிக் கொண்டதாகவே கருதப்படுகிறது. மீண்டும் திலீபன் காட்டிய வழியைப் பின்பற்றியே தமிழ் மக்கள போராடத் தலைப்பட்டிருக்கின்றனர் என்று தான் சொல்லலாம்.

நாங்கள் தலைவர் பிரபாகரன் கொள்கையுடன் போராடி அங்கு பல உயிர்களை விதைத்துவிட்டுத்தான் வந்திருக்கிறோம். 2009 வரை ஆயுதம் ஏந்திப் போர்க்களத்திலிருந்து போராடினோம். தற்பொழுது மீண்டுமொரு அரசியல் களத்திலிருந்து அஹிம்சை வழியில் போரடி வருகிறோம். திலீபன் தமிழீழக் கனவை வைத்துப் போராடவில்லை மாறாக ஐந்து அம்சக் கோரிக்கையை வைத்தே அன்று போராடினார். அவர் இறந்தும் இன்றுடன் 30 வருடங்களுக்குப் கழிந்த பின்னரும் நாம் அதே நிலையில்தான் இருக்கிறோம் என்பதுதான் வருத்தத்திற்குரிய விடயம். 89 ஆயிரம் கணவனை இழந்த விதவைகள், 10 ஆயிரம் அநாதைகள், 40 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளான மக்கள், 5 ஆயிரம் மாற்றுதிறன் உள்ள போராளிகள் என நலிவுற்ற சமூதாயமாகவே இன்று வாழ்ந்து வருகின்றோம்'. இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் கணேசலிங்கம் - துளசி தனது உரையில் தெரிவித்திருந்தார்.

அதேவேளை தற்பொழுது கடந்த 30 ஆண்டுகள் போராட்டம் வட்டமாகச் சுற்றி வருகிறது. ஒற்றையாட்சியில் எந்தவொரு தீர்வும் எமக்கில்லை மஹிந்த அரசாங்கத்தின் காலத்திலே அவரால் இது போன்ற ஒரு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டது. அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாத தமிழ்ப் பிரதிநிதிகள் ஏன் இந்த ஆட்சியில் மட்டும் இதனை ஏற்றுக் கொள்ள முனைகின்றார்கள் என்று எமக்குப் புரியவில்லை இந்த அரசாங்கம் மட்டுமில்லை எந்த அரசாங்கம் வந்தாலும் எம்மைத் தொடர்ந்து ஏமாற்றும் ஆகவே நாம் அணைவரும் வீதியிலே இறங்கிப் போராட வேண்டும். ஒற்றையாட்சியை நிராகரித்து சமஷ்டித் தீர்வை நோக்கி நாம் தொடர்ந்து போராட வேண்டும்.' என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா - கஜேந்திரன் தெரிவித்திருந்தார்.

30 வருடமாக வேரூன்றியிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பை இல்லாதொழித்து விட்டோம் என்று மார் தட்டிக் கொள்ளும் அரசினால் தமிழ் மக்களின் மனங்களை இன்னும் சமாதானப்படுத்த முடியவில்லை. எந்த வழியிலும் அவர்களை வெல்ல முடியவுமில்லை. அதே சமயம் திலீபனின் தியாகத்தை இன்றும் தங்கள் மனதில் தாங்கிப் பயணிக்கின்றனர் தமிழ் மக்கள். இன்னும் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதை அவர்கள் சொல்லாமல் சொல்லுகின்றனர். அத்துடன் தாம் இன்னமும் சமாதான வழிகளிலும், அஹிம்சையிலும் நம்பிக்கை வைத்தே வாழ்ந்துவருவதையும் குறிப்பிடுகின்றனர். அப்படியாயின் இந்த நல்லிணக்க அரசு ஏன் இன்னும் இதைப் புரிந்துகொள்ளவில்லை. ஆண்டவனுக்கு மட்டும்தான் வெளிச்சமான விடயம் இது. அதனால்தான் திலீபன் தனது அறப்போராட்டத்திற்காக இறைவன் சந்நிதியைத் தேர்ந்தெடுத்தானோ....?

## வித்யா கொலை வழக்கு... (05ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் சுவிஸ்குமார் சிறையிலிருந்தபோது அங்கிருந்த இப்ரான் என்பவரோடு இரண்டு கோடிக்கான பேரம் பேசப்பட்டுள்ளது. பின்னர் இப்ரான் தன்னை இரண்டு கோடி கேட்டு இப்ரான் மிரட்டியதாகப் பொய் கூறினார் சுவிஸ் குமார். எதிரிகளுக்காக வாதாடிய சட்டத்தரணி 200க்கு மேற்பட்ட பக்கங்களில் எதிரிகள் சித்திரவதைக்கு உட்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவர்கள் ஆடைகளைக் களைந்து கட்டித் தூக்கிச் சித்திரவதை செய்யப்பட்ட-தாக அவர் அதில் குறிப்பிட்டிருக்கிறார். பலவழிகளிலும் அந்த வழக்கை பொ-லிஸ் திணைக்களம் ஒளிக்கப் பார்-த்தது. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பொறுப்பேற்றதும் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கின. ஏன் உங்களுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என தீர்ப்பாயம் எதிரிகளைக் கேட்டபோது தாம் நிரபராதிகள் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டனர். தீர்ப்பின் இறுதியில் நீதிபதிகள் அனைவரும் எழுந்து நிற்க மின்சாரம் நிறுத்தப்பட்டு நீதிபதிகள் தீர்ப்பினை வாசித்தனர். தமது தரப்பினர் இக்குற்றத்தைச் செய்யவில்லை எனவும் நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விட்டார்கள் என்றும் ஊடகங்களுக்கு செய்தி சொன்னார் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன. குற்றவாளிகள் அனைவரும் கண்டி போகம்பரைச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்



# நடக்கப் போகிறார் நடராஜா

நவீன நகைச்சுவைத் தொடர் 17

— உமா சந்தோஷ் —

அந்தப் போட்டோக்களை நடாவின்ரை மனிசி தன்ரை பேஸ்புக்கிலையும் லேடீஸ் கிளப்பின்ரை பேஸ்புக்கிலும் போட்டிருக்கெண்டு கதை. தன்னுடைய அக்கா ஒரு புகழ்விரும்பி என்றும் அதேநேரத்திலை பச்சைத் தண்ணியிலை பலகாரம் சுடக்கூடியவர் என்பதுவும் டொக்டர் மச்சாளுக்குத் தெரியும்.

'என்ன கனக்கக் கதைக்கிறா. எழும்பிக் குளிச்சிட்டு சாப்பிடச் சொல்லு" டொக்டர் மச்சாளைப் பார்த்துக் கட்டளை பிறப்பித்தார் நடா.

'அத்தான் என்ன பிளான் இண்டைக்கு' டொக்டர் மச்சாள் தொடர 'ஓட்டோக் காரனை வரச் சொன்னான். இண்டைக்குப் பண்ணைக்குப் போய் மீன் சந்தையையே வாங்கிக் கொண்டு வரப்போறன். என்ரை மிஸிஸுக்கு நல்ல சாப்பாடு குடுக்க வேணும் எல்லே" இரட்டை அர்த்தத்தில் நடா சொல்வதை எல்லோரும் புரிந்து கொண்டனர்.

குளிக்க ரவலோடு பாத்ரூம் பக்கம்போன நடாவைப் பின்தொடர்ந்தார் அவர் மனைவி. 'இஞ்சருங்கோ, நானும் பண்ணைக்கு வரட்டே? சண்டைக்குப் பிறகு நானும் பண்ணைப் பக்கத்தைப் பாத்துக் கன நாளாச்சு. அப்பிடியே சென்.ஜோன்ஸ் கொலிச் பக்கத்தையும் பார்க்க வேணும்" கெஞ்சினாள் நடா மனைவி.

அவளின் கள்ளப் பிளான் நடாவுக்கு விளங்கிவிட்டது. அவள் எதற்கும் சூர்ப்பனகை போல கள்ளப் பிளான் போடுவதில் வல்லவர் எண்டு நடாவுக்குத் தெரியும். அவரே சில நேரங்களில் தனது அலுவலகப் பிரச்சினைகளைக் கூட அவளிடம் சொல்லி அட்வைஸ் கேட்கிறவர். அவள் அட்வைஸ் என்றும் குறி தவறாதவொன்று.

வேண்டாம் ரவத்திரி பஸ்ஸிலை வந்த களைப்பு இன்னும் இருக்கும். தொட்ட உடனை உனக்கு வருத்தம் வாறது தெரியுந்தானே? இஞ்சை வெய்யிலும் கூட. அது உனக்குப் பழக்கமில்லை. போய் படுத்து றெஸ்ற் எடு' நடா அவளை ஒரு வெட்டு வெட்டி விட்டுக் குளிக்கப்போய் பாத்ரூம் கதவைச் சட்டென சாத்திக் கொண்டார்.

ஆனால் நடாவுக்குத் தெரியாது தனது மனைவி பண்ணைப் பக்கம்போக ஏன் ஆசைப்பட்டவ எண்டு, அவ சுண்டுக்குளியிலை படிக்கேக்கை பப்ளிக் லைப்ரரியிலை மார்க் எண்டவரைச் சந்தித்தாப்போலை நட்பு ஆரம்பமானது. கனகாலம் தொடர்ந்த அந்த நட்பு காதலை எட்ட முன்னர் அவவை நடாவுக்குக் கட்டிவச்சிட்டினம். அந்த மார்க் படிச்சது சென்.ஜோன்ஸிலை. அதுக்குப் பிறகு மார்க் என்ன ஆனார் எண்டு யாருக்கும் தெரியாது.

அப்ப, இப்பபோலை கானட் போனும் இல்லை. இன்ரநெற்றும் இல்லை. ஈ மெயிலும் இல்லை. என்றதாலை மார்க்கோடை அவவுக்கு ஒரு தொடர்பும் இல்லை. ஆனாலும் எப்பவும் யாழ்ப்பாணத்துக்கு வந்தால் சென்.ஜோன்ஸ் கல்லூரிப் பக்கம் பார்த்தால்தான் அவவுக்கு நிம்மதி. அத்தனைக்கு மார்க் அவவின்ரை மனசில இடம்பிடித்து விட்டார். ஆனால் இற்றைவரை இந்தக் கதை நடாவுக்குத் தெரியாது. அது தெரிஞ்சால் அதை வைச்சே நடா பல விளையாட்டைக் காட்டிப்போடுவர் எண்டு அவரின்ரை மனைவிக்குத் தெரியும்.

பண்ணையிலை மீன் வந்து குவிந்து கொண்டிருந்தது. ஒரே சனத்தின்ரை இரைச்சல்வேற. ஓட்டோ பெடியன்தான் பாக்கோடை நடாவுக்குப் பின்னாலை மீன் கடை எல்லாம் சுத்தினவன். சுத்தியும் நடாவுக்கு மீன் ஒண்டிலையும் மனஞ்செல்லேல்லை. புது வள்ளம் ஒண்டு வந்து கரையை அண்டேக்கை எல்லாரைப்போலவும் நடாவும் ஓடிப்போனார். 'நல்ல அசல் மீன்.' விளை, ஒட்டி, தூடை' எண்டு பெருங்குவியல் ஒண்டைப் பச்சைத்தாள் இரண்டை உருவிக் குடுத்து வாங்கினார் நடா.

மீன் வாசத்தாலை சுந்தர்மடமே பொங்கியெழுந்தது. நடா றாக்கைத் தொங்கப் போட்டுவிட்டு சாய்மனைக் கதிரையிலை உட்கார்ந்திருந்தார். நடாவுக்கெண்டு கொஞ்சத்தை எடுத்து வேலைக்காரி ஒடியல் கூழ் காய்ச்சியிருந்தாள். கரண்டியால் சுடச்சுட இருந்த கூழை உள்ளங்கையில் விட்டு ருசி பார்த்தார் நடா மனைவி. 'நல்ல ரேஸ்ட்' வாயைப் பொச்சடித்தார். அந்தச் சத்தத்தைக் கேட்டுவிட்டு குசினிக்குள் ஓடி வந்தார் நடா.

' ஆர் என்ரை கூழிலை கை வைக்கிறது' நடா கேட்டார். 'நான்தான்' என்று நடா மனுசி சொல்ல மௌனத் தோடு வெளியே போனார் நடா.

நடா சாப்பாட்டு மேசையிலிருந்து கூழை ருசித்துக் கொண்டிருந்தார். ரெலிபோன் மணி அடித்தது. டொக்டர் மச்சாள்தான் கோலை எடுத்தார்.'அக்கா. உங்களுக்குத்தான்" டொக்டர் மச்சாள் கத்தினார். போன்கோலை எடுத்ததும் நடா மனைவியின் முகம் கறுத்துப போனதை நடா காணவில்லை. டொக்டர் மச்சாள் இதைக் கவனித்துவிட்டார்.போனின் அந்தப் பக்கத்தில் இருந்து ஒரு பெண்ணின் குரல் பலமாகக் கேட்டது.

'நான் இங்கை நிக்கிறதாச் சொல்லிப் போட்டீரே?' நடாவின் மனைவி அடுத்த பக்கத்தில் இருந்து பேசியவரிடம் கேட்டாள். ரெலிபோனை வைத்ததும் நடா மனைவி ரென்சனில் இருந்தார்.

'அம்மாவைக் கூழ் குடிக்கக் கூப்பிடு' வேலைக்காரியிடம் சொன்னார் நடா. 'அம்மா தலையிடி எண்டு படுத்திருக்கிறா." வேலைக்காரி சொன்னாள். 'ஏனாம்" நடா பதைபதைத்துப் போனார்.

'மார்க் என்னைப் பார்க்க இங்கை வாறாராம். என்ரை பிரண்ட் விசரி. தற்செயலா அவரை காகில்ஸ் பூட் சிற்றியிலை காணேக்கை நான் இஞ்சை இருக்கிறதைச் சொல்லி என்ரை விலாசத்தையும் குடுத்திட்டாள். விசரி...விசரி... இஞ்சை மார்க் வந்தால் எல்லாம் பிரச்சினையாப் போய்விடுமெல்லே. ஆர்...ஆர் அது எண்டு என்னைத் துளைச்சுப் போடுவார். உண்மையைச் சொன்னால் எல்லாம் வெளிக்கும். பிறகு நடா ஒண்டுஞ் செய்யமாட்டார். அவற்றை ஒபிஸ் பிறண்ட் நாயலியைப் பப்ளிக்கா கொண்டு திரியத் தொடங்கிவிடுவர்." நடா மனைவி தனக்குள் திட்டிக் கொண்டாள்.

(தொடரும்)




அகத்தின் அழகு
முகத்தில் தெரியும் என்பர்...
என் அகமும் நீதாண்டா...
என் முகத்தில் தெரியும்
உருவமும் நீதாண்டா...
உன்னை நான் என்னில்
சரிபாதியாக ஏற்றுக் கொண்டேன்
பின்பு ஏனடா என்னை
ஏற்கத் தயங்குகின்றாய்...
தென்றல் காற்று என்னை...
வாவென்று அழைக்கும்...
பசுமையான வயல் வெளியில்
என்னையே மறந்து -நான்
உன்னை நினைத்த
அந்த நாளையும்...
உன்னையே நினைத்து
நீ என்னை நினைத்த அந்த
நாளையும்...
என்னைப் பற்றி நீ புகழ...
உன்னைப்பற்றி நான் புகழ...
நம்மைப் பற்றி யார்
புகழ்வாரோ
என்று நினைத்த அந்த
நாளையும்...
நான் மறவேண்டா...

சி.துஷாங்கி
நெல்லியடி.




எதுவரை இந்த வாழ்க்கை என
தெரியவில்லை...
தொலைந்தவைகள் இனி
கிடைக்க போவதுமில்லை
இருந்தும் தேடுகிறேன் மீண்டும்
புது உறவு எனக்கு
பிடித்ததுபோல் கிடைக்காது
என தெரிந்தும்...
மனமெல்லாம் ரணம் - பாசம்
வைத்தவர்கள் கூட பக்கத்தில்
வர மறுக்கின்றார்கள் ஆறுதல்
சொல்வதற்கு...
விடியும் நாளெல்லாம் எனக்கு
முடியும் நாளாக வேண்டும்
என எண்ணுகிறேன் - அதுவும்
கனவாகி போகின்றது...
தற்கொலை செய்துகொள்ள
தைரியம் இல்லை...
என் அகத்தில் காயங்களுடனும்
முகத்தில் புன்னகையுடனும்
வாழ்கிறேன் வாழ வேண்டுமே
அதற்காக...

எஸ்.ஏ.றெனி
பருத்தித்துறை.




≡ நோக்கன் ≡

# புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கை! கூட்டமைப்பு சொல்ல முனைவது என்ன?

இதோ வருகிறது... இதோ வருகிறது என்று சொல்லிக் கொண்டிருந்த புதிய அரசமைப்பும் வந்துவிட்டது. அந்தச் சொல்லை வைத்தே பல காலம் தமது அரசியலை ஓட்டிய விற்பன்னர்களுக்கு அதில் என்ன உள்ளது என்று முன்னரே தெரிந்தபோதும், தெரியாததுபோல வரட்டும் பாக்கலாம் என்று வீரவசனங்கள் பேசிக் கொண்டிருந்தனர். வந்த பின்னர் இப்போது வசைபாடத் தொடங்கியுள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா கடந்த சில தினங்களுக்கு முன்னர் அப்பள உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றினார். அதில் புதிய அரசமைப்புத் தொடர்பாக வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கையை தமிழர்களுக்கான தீர்வாக ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறியிருக்கிறார். தொடர்ந்து பேசிய அவர் இந்த இடைக்கால அறிக்கையை முன்னிலைப்படுத்தி எமது பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள முனைய வேண்டும் என்றும் சொல்லியுள்ளார்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், 'மூன்று மாதங்களுக்கு முன்னர் நல்லாட்சி அரசாங்கத்துக்கு எதிராக எவரையும் கருத்துக் கூறக்கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எச்சரிக்கை விடுத்தார் என்றும் ஆனால் தற்போது இடைக்கால அறிக்கைக்கு எதிராக கருத்துத் தெரிவிக்கவேண்டாமென அன்புக் கட்டளையிட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

இடைக்கால அறிக்கைக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்லாது வடக்கு-கிழக்கு மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களையும் இடைக்கால அறிக்கைக்கு எதிராக கருத்துக் கூறவேண்டாம் என இரா.சம்பந்தன் கேட்டுக் கொண்டுள்ளார். இடைக்கால அறிக்கையை ஏற்றுக்கொண்டு இறுதி அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் இந்த நல்ல சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது எனவும் சம்பந்தன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இருபதாவது திருத்தச் சட்ட மூலமும் இடைக்கால அறிக்கையும் சமகாலத்தில் வெளிவந்ததன் நோக்கம் என்ன? குறிப்பாகத் தமிழருக்கான தீர்வாக எதைக் கொண்டு வந்தாலும் அதை சந்தேகக் கண்ணோடு பார்ப்பதுதான் சிங்களப் பேரினவாதத்தின் வழமை. இதைத் தெளிவுற அறிந்தும் இரண்டு திட்டங்களை ஒரு சேரக் கொண்டு வர ஏதோ ஒரு தைரியம் அரசுக்கு வந்திருக்கிறது. அது என்ன? இரண்டிலும் தமிழருக்குத் தீர்வாகவோ அல்லது அவர்களுக்கு நன்மை தரக்கூடியதான ஒன்றும் இல்லை என்பதே அந்தத் தைரியத்துக்கான காரணம் என்பது வெள்ளிடமலை.

புதிய அரசமைப்பில் தமிழரின் முக்கிய கோரிக்கைகளான, வடக்கு - கிழக்கு இணைப்பும், சுயநிர்ணய உரிமை என்ற பேச்சுக்கும் இடமில்லை. ஒற்றையாட்சிக்குப் பதிலாகக் கூட்டாட்சி என்ற அடிப்படையையும் கருத்திற் கொள்ளவில்லை. எனவே இத்தகைய தமிழர் நலன் எதுவுமற்ற இடைக்கால அறிக்கையைக் கொண்டு தயாராகப்போகும் இறுதி அறிக்கையில் என்ன இருக்கப் போகிறது. அதுமட்டுமல்லாமல் இடைக்கால அறிக்கைபற்றி வரப்போகும் விமர்சனமும், கருத்துருவாக்கமும் எப்படி ஒரு ஆரோக்கியமான உறுதி அறிக்கையைத் தயாரிக்க உதவும்.

எனவே இடைக்கால அறிக்கை பற்றி மௌனம் சாதிக்கச் சொல்லும் சம்பந்தரின் அன்புக் கட்டளையின் இராஜதந்திரம்தான் என்ன?

பண்டா - செல்வா ஒப்பந்தம் கூட கடைசி வரை வெளியிடாமல் வைத்தே நிறைவேற்ற எடுத்த நடவடிக்கையை ஜே.ஆர். தகர்த்தெறிந்தது ஞாபகமிருக்கும்.

தமிழர்கள் இதுவரை இருந்ததைப்போல இருந்து விட்டுப் போகட்டும். அவர்களுக்கு ஏன் விசேட சட்டம் வேண்டும் என்று சிங்களம் மட்டும் என்ற விருப்பைக் கொண்ட பெரும்பான்மையினர் அவ்வப்போது கருத்தத் தெரிவித்துக் கொண்டு வரும் பட்சத்தில் இடைக்கால அறிக்கையை சும்மாதான் விடுவார்களா? கடித்துக் குதறமாட்டார்கள் என்பதில் என்ன சந்தேகம். இதுவரை இருந்த சுதந்திரமும் பறிபோகலாம் என்று கருத்துச் சொல்பவர்களும் நம்மிடையே இல்லாமலில்லை.

அத்துடன் இறுதி அறிக்கையில் தமிழர்களுக்கு அதிகளவு அதிகாரம் கொடுத்தால், தற்போதுள்ள நல்லாட்சி அரசாங்கத்தின் நடவடிக்கையை மிகவும் அவதானமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கும் மகிந்த ஆட்சியாளர்களுக்கு அல்வா கொடுப்பதைப்போல அல்லவா இருக்கும். காலா காலமாக அரசபீடத்தைக் கைப்பற்ற சிங்களக் கட்சிகள் கையாண்ட உத்தியை மகிந்தாவும் பாவிக்கமாட்டார் என்பதில் என்ன உத்தரவாதம். தமிழர்களின் தலைகளை உருட்டி உருட்டித்தானே அவர்கள் பதவிக்கு வந்தனர்.

இத்தகைய சந்தேகங்களுக்கு விடை என்னவாக இருக்கலாம். அண்மைக்காலமாகத் தற்போதைய அரசுக்கு மகிந்த எப்பொழுதும் அச்சுறுத்தலாகவே இருப்பது தெரிந்ததே. உண்மையில் தமிழருக்கு மகிந்த உரிமை கொடுக்க விரும்பினாலும் அதை மைத்திரி - ரணில் அரசுக் ஊடாகக் கொடுக்க மானசீகமாக அனுமதிக்க மாட்டார். அதைத் தனது கையாலேயே கொடுத்துப் பெயர் வாங்க விரும்புவர். எனவே இதில் மறைபொருளாக என்றும் இருக்கத் தேவையில்லை. மௌனம் காக்கவும் தேவையில்லை. இப்படியான விடயங்களைப் பெரிதுபடுத்தி மக்களைத் த்ரிலில் வைத்திருப்பது யாருக்கு அவசியமோ? அவர்கள் அதைத்தான் செய்வார்கள். அடுத்த தேர்தல் வரை...!

இணையத்தளங்களை பார்த்துக் கொண்டிருந்தபோது ஐ.நா. நாடுகள் சபையின் அரங்கில் ஒரு பையன் முழங்கிக்கொண்டிருந்தான். அவன் பெயர் சஞ்ஜயன் அவன் தியாகி திலீபனின் கோரிக்கைகளையும் அவர் எந்த வழியில் போராடினார் என்பதையும் ஆங்கிலத்தில் அங்கு பல்வேறு நாடுகளின் பல்வேறு சமூகங்களை சேர்ந்தவர்களுக்கும் சென்று சேரும்படி உரையாற்றினான். திலீபனின் நினைவையும் அதன் காலப் பெறுமானத்தையும் அந்தப் புலம்பெயர் தமிழ்ப்பையன் சரியாக இன்றைக்கு தேவையான ராசதந்திர அடிப்படையில் விளங்கி வெளிப் படுத்தியுள்ளான் .தமிழீழ விடுதலைப் போரின் நீட்சியாக 2009 இன் பின்னான வடிவம் எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதற்கு தீர்க்க தரிசனத்துடன் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு இளந்தலைமுறை புலம்பெயர் தேசத்தில் இருப்பது மகிழ்ச்சி அளிப்பது மட்டுமல்ல ஈழத்தமிழர் விடுதலைப்போராட்டத்தின் கடமை பெருமளவில் புலம்பெயர் தமிழர்களிடமும் தமிழகத்தமிழர்களிடமும் கொடுக்கப்பட்டுள்ளது .




# திலீபன்: சடங்கின் அடையாளமல்ல புரட்சியின் சின்னம்!

தியாகி திலீபன் ஒரு புரட்சிகரபோராளி ஆயுதவழிப்போராட்டத்தில் பயணித்த கால ஒழுங்கில் தனது போராட்ட வடிவத்தை அகிம்சைக்கு கொடுத்து தன்னை முழுமையான ஒரு அகிம்சையின் வடிவமாக மாற்றி அர்ப்பணித்தவன். மட்டுமல்ல சாகும் பயணத்தில் மிகத்தெளிவான செய்திகளை அவன் மக்களுக்கு சொல்லிச் சென்றான். விடுதலைப் போராட்டம் ஒரு மக்கள் போராட்ட அடையாளமாக மாறாமல் அது ஒரு அமைப்பின் போராட்டமாகவோ அல்லது ஒரு கட்சியின் போராட்டமாகவோ அமையுமெனில் ஈழத்தமிழர்களுக்கு விடுதலை சாத்தியமில்லை என்பதுதான் அந்தத் திருவாசகம். அத்திருவாசகத்தின் செயல்வடிவத்தை எமது தமிழ்மக்கள் நிறைவேற்றி விட்டார்களா என்பது கேள்வியாகி நிற்கின்றது.

தியாகி திலீபன் முப்பதாம் ஆண்டில் மட்டுமல்ல முந்நூறாவது ஆண்டிலும் யாருக்கும் வரமருளப் போவதில்லை. திலீபன் சடங்குகளின் அடையாளமல்ல அவர் ஒரு புரட்சியின் அடையாளம். அவரது நினைவு போராடும் மக்களின் அடுத்தகட்ட பயணத்தின் திட்டமிடல் மையம் சேதிமையம். இதையே தலைவர் பிரபாகரன் செய்தார். மாவீரர் நாள் உரையென்பது அத்தகையதொன்றே. ஒவ்வாரு மாவீரர் நாட்களிலும் பிரபாகரன் ஒரு செய்தியை மக்களுக்கு சொன்னார். அதை எதிர்த்தரப்பு படைகள் அரசாங்கம் சர்வதேசமும் கேட்டுக்கொண்டது. அதன் மீது ஆர்வம் இருந்தது. காரணம் புரட்சியாளர்களின் மரண நினைவில் இன்னொரு புரட்சியாளனால் உரைக்கப்படும் வாசகங்கள் வெறுமனே வாசகங்களாகவும் வெறுமனே கண்ணீரும் கம்பலையுமாக சடங்காக நின்றுவிடப்போவதில்லை என்பதுதான். திலீபன் விரும்பிய பாடலும் அதுதான் .

"ஓ மரணித்த வீரனே உன் சீருடை-களை எனக்குத் தா உன் பாதணிகளை எனக்குத் தா உன் ஆயுதங்களை எனக்குத் தா....."

தமிழர்களின் ஆன்ம பலமும் உயிரைக் கொடுக்கின்ற திடசித்தமும் 2009 வரை சயனைட் அருந்தியும் தன்னுடலில் வெடிமருந்தேற்றி வெடித்துச் சிதறியும் அன்னியர்களிடம் தான் சார்ந்த, தன் அமைப்பு சார்ந்த இரகசியம் கசிந்துவிடக் கூடாது என்பதற்காக சிறையில் தன் நாக்கை அறுத்து எறிந்தும் வேவுே வளையின் போதும், எதிரிகளின் முகாம் சூழ உள்ள பற்றைகளில் காடுகளில் விஷம் தீண்டியபோதும், தங்கள் உடலில் நாக பாம்புகள் ஊர்ந்த போதும் அப்படி எந்த சலனத்தையும் காட்டாமல் இறந்து விறைத்தும் இந்த உலகுக்கு காட்டப்பட்டு விட்டது. அதை இந்த உலகத்தின் வல்லாண்மைச் சக்திகள் மிக நன்கறியும். தமிழர்கள் 'கெற்றப்போல்' வைத்திருக்கவில்லை என்பதையும் நன்கறியும் உலக புலனாய்வுகள். ஆகவேதான் மிகப் பெரும் ஆயுதவழிப் போராட்டத்தின் பின்பு தமிழர்களின் ஆன்மபலத்தை எவ்வாறு வெளிப்படுத்தவேண்டு மென்பதில் கடந்த எட்டு வருடங்களில் ஈழத்தமிழ்ச்சமுகம் தோற்றுக்கொண்டே இருக்கின்றது.

ஆயுதவழியில் மிகப்பெரும் இராணுவச் சமநிலையில் விடுதலைப் புலிகள் இருந்தபோதும் அக்காலத்தில் பொங்குதமிழ் போன்ற மக்கள் எழுச்சிவடிவங்களை அந்த இயக்கம் ஊக்குவித்ததன் காரணத்தை நினைத்துப் பார்க்கலாம். அக்காலத்தில் புரட்சியாளர்களின் நினைவு நாட்கள் எதிரிகளுக்கு நித்திரையற்ற நாட்களாகவே இருந்தன. ஏன் அத்தகைய ஒரு பண்பாடு பேணப்பட்டது? ஒரு புரட்சியாளனின் நினைவுக்கு அக்காலத்தின் புரட்சியாளர்கள் ஒரு வெற்றியையே படையலாக்கினார்கள். யாழ்ப்பாணக் கோட்டையில் புலிக்கொடி பறந்ததும். ஓயாத அலைகள் இரண்டில் கிளிநொச்சி மீதான நில மீட்புப் போரும் அத்தகையதே. எனில் முப்பதாம் ஆண்டில் தியாகி திலீபன் நினைவேந்தலில் நமது நிலை என்ன.

தியாகி திலீபனின் எண்ணங்களாக கேப்பாபிலவு நிலமீட்புத் தொடர் சத்தியாகிரகப் போராட்டம். அது சத்தியாகக் கிரகப் போர்க்களம். அப்போர்க்களத்தில் மக்கள் வாழ்கிறார்கள். ஏனெனில் அவர்கள் வாழ அவர்களின் சொந்த நிலமில்லை. இந்த உறுதியான நிலமீட்பு வடிவம் ஐ.நாடுகள் சபை அரங்கு வரை சென்றிருக்கின்றது. அந்நில மீட்புக்களத்திலேயே அம்மக்கள் தமது நிலம் பற்றிய தகவல்கள் அடங்கிய பதாகை முன் திலீபனின் படத்தை வைத்து வணங்கினார்கள். இதுவே திலீபனின் பேராட்டத்தின் நீட்சி எனக் கருதலாம்.

காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்காக நீதி கோரி மாவட்டங்கள் தோறும் முன்னெடுக்கப்படும் இருநூறு நாட்களை கடந்த கவனியீர்ப்பு சத்தியாக்கிரக போராட்டம். இந்த பேராட்டமும் ஐக்கிய நாடுகள் சபை வரை ஈழத்தமிழர்களின் செய்தியை கொண்டு சேர்த்திருக்கின்றது. இத்தகைய பேராட்டகளத்தில் திலீபன் உயிர்க்கிறான் என்றே சொல்லவேண்டும். திலீபனை முன்னிறுத்தி அவரின் ஆன்பலத்தை அடிப்படையாக கொண்ட இத்தகைய பேராட்டங்கள் இறுதி இலக்கை அடையும்படி காலச்சூழல் உருவாகும். இத்தகைய தொடர் பேராட்டங்களில் கலந்து கொண்ட சிலர் இறந்திருக்கிறார்கள். மன வலி உடல் ரீதியான பாதிப்புக்கள் துயரம் அவர்களின் உயிர்களை பறித்திருக்கின்றது. இவை அதிர்வலைகளை ஏற்படுத்தவல்ல பேராட்டங்கள் பயணமாகின்றன. திலீபனின் முப்பதாவது ஆண்டு கன பெறுதியுடையது.

(18ஆம் பக்கம் பார்க்க)


# குறிஞ்சி மலர்


# ஆபத்தில் இருக்கும் அபூர்வம்

*தமிழரின் ஐ வகை நிலப் பயன்பாடுகளில் மலையும் மலை சார்ந்த நிலம் குறிஞ்சி என்றழைக்கப் பட்டது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர் இந்நிலத்திலேயே அதிகம் உண்டு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியத்திலும் தமிழர் வாழ்வியலிலும் முக்கியத்துவம் பெற்று விட்ட குறிஞ்சி பூ அருகி வருகின்றது. அழிவின் விளிம்பில் நிற்கும் பெருமைகள் பல மிக்க குறிஞ்சியை பாதுகாக்கவுதமிழ்நாடு அரசைக் கோரி தாமரை இலக்கிய இதழின் ஆசிரியர் எழுதிய கட்டுரை இங்கு மீள்பிரசுரமாகிறது.*

அமெரிக்கத் தலைநகர் வோஷிங்ரனிலிருந்து வந்த ஒரு கைபேசிஅழைப்பு குறிஞ்சி மலரைப் பற்றியதாக இருந்தது. அழைத்தவர் யாழ்ப்பாணத்தின் இளவாலையில் பிறந்தவரான தங்கை புஷ்பராணி. இலக்கியங்களில் எடுத்துரைக்கப் பட்ட குறிஞ்சி மலர், தமிழ்நாட்டில் எங்கு இருக்கிறது என்பதுதான் அவரது தேடல்.

மூணாறு, இடுக்கி போன்ற மலைச் சரிவுகளில் குறிஞ்சி மலர்கள் பற்றிய கேரள அரசு வெளியிட்ட விவரங்கள் மட்டும் அவருக்கு கிடைத்திருக்கின்றன. தமிழக அரசின் இணையதளங்களிலும், சுற்றுலாத் தலங்களிலும் குறிஞ்சி மலர் குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை என்று அவருக்குக் கோபம். உண்மைதான், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் மலர் என்பதைத் தவிர, நமக்கு குறிஞ்சி மலர் பற்றி என்ன தெரியும்?





### மலர் வளம்

உலகின் மூத்த மொழிகள் பலவற்றின் இலக்கியங்களைவிடக் கூடுதல் அழகியல் விவரிப்புகளைத் தமிழ் பெற்றிருப்பதற்குக் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. பல நூற்றாண்டுகளாக உலகமெங்கும் ஆதிக்கம் செலுத்திவரும் ஐரோப்பியத் தொல் இலக்கியங்கள் சிறப்புக்குரியவை தான் என்றாலும், தமிழ் இலக்கியங்களைப் போல அழகியல் நுட்பத்தை அவை பெற முடியவில்லை என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இதற்கு முக்கியக் காரணம், தமிழ் நிலத்தின் மலர்கள்தான் என்று சொல்லலாம். கூர்ந்து கவனித்தால் நறுமணம் பொருந்திய மலர்களின் வனமாகத்தான் சங்க கால இயற்கைச் சித்தரிப்புகளில் பல அமைந்துள்ளன.

ஐரோப்பிய மொழி இலக்கியங்கள் பலவற்றைக் கற்றறிந்தவரும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளுக்கு அடித்தளம் அமைத்தவருமான தனிநாயகம் அடிகளின் ஆய்வு மதிப்பீடுகள் நம்மை வேறு ஒன்றைச் சிந்திக்கவைக்கின்றன. பனி போர்த்திய மேற்கத்திய நாடுகளின் மொழிகளின் செவ்விலக்கியங்கள், ஒரே வெண்மையாகத்தான் தெரிகின்றன. ஆதி காலத்தில் பல வண்ணங்களின் நெருக்கம் ஐரோப்பியர்களுக்கு இல்லை. வண்ணங்கள்தான் மனிதருக்குள் அழகியல் நுட்பத்தை வளர்த்தெடுக்கின்றன.

### குறிஞ்சியின் பெருமை

தமிழ் மக்களின் புவி சார் வாழ்க்கை அலாதியானது. மிதமான வெப்பமும் மிதமான குளிரையும் பெற்றுள்ள இந்த நிலப் பகுதியின் மலர்கள் பல நிறங்களில் பிறப்பெடுத்தவை. தமிழ் மொழியின் செழுமை மிக்க அழகியலும் இந்த வண்ணங்களிலிருந்தும், மலர்களிலிருந்தும் தோன்றியவை. இந்த மலர்களில் முதன்மையானது என்று குறிஞ்சிப் பூவைப் பற்றி பண்டைய தமிழகம் பெருமை கொண்டுள்ளது.

கபிலரின் குறிஞ்சிப் பாட்டு பிறந்து கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டன. இதில் குறிஞ்சிப் பூக்கள் உட்பட 99 பூக்களின் பட்டியல் விவரங்களுடன் தரப்பட்டுள்ளது. மலர் தலை உலகு, என்று பூமியைப் பார்த்த தமிழர்கள், ஐந்து வகை நிலங்களை வகுத்தெடுத்து அதற்குத் திணை என்று பெயரிட்டார்கள். திணை ஒவ்வொன்றுக்கும் ஒரு மலரையும் அறிவித்துக் கொண்டார்கள். இதைப் போலவே திணை ஒவ்வொன்றுக்கும் வாழும் நெறி அல்லது திணை ஒழுக்கம் ஒன்றையும் வகுத்துக் கொண்டார்கள்.

### ஓராண்டு குறிஞ்சி

குறிஞ்சி மலரின் சிறப்பு அது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கிறது என்பதில்தான் அடங்கியிருக்கிறது. அதன்படி நீலகிரி மலையில் குறிஞ்சி மலர்கள், 2018-ல் பூக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உண்மையில், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் குறிஞ்சிப் பூக்கள் பூக்கின்றனவா என்ற சந்தேகத்தைப் பலரும் எழுப்புகிறார்கள்.

இது பற்றிய விளக்கங்களை நீலகிரி மாவட்டம் ஊட்டியைச் சேர்ந்த குறிஞ்சி மலர் ஆர்வலர் மதிமாறன் சில முக்கியத் தகவல்களைத் தெரிவித்தார். ஓராண்டுக்கு ஒரு முறை, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, ஆறாண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி வகைகளும் உண்டு என்கிறார் அவர்.

ஒரு காலத்தில் ஐந்து வண்ணங்களில் குறிஞ்சிப் பூக்கள் இருந்திருக்கக்கூடும் என்று சிலர் கருதுகிறார்கள். நீலம், கருநீலம் மட்டும் தான் இப்போது நீலகிரியில் காணப்படுகிறது. குறிஞ்சியின் நீல நிறம்தான் நீலகிரி மலையின் பெயராக அமைந்தது என்றும் சிலர் கூறுகிறார்கள். கோத்தகிரி, கொடநாடு, தொட்டபெட்டா, மேல்பாவானி, குந்தா ஆகிய இடங்களில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் மலைகள் முழுவதும் குறிஞ்சி பூத்து நிற்கும் காட்சியைப் பார்க்க முடியும்.

பூக்களின் வருகையை வசந்தத்தின் வருகையாக, இங்குள்ள பழங்குடி மக்கள் கருதுகிறார்கள். நீலகிரி மலையில் தோடர், இருளர், பனியர், குறும்பர், காட்டு நாயக்கர் முதலான பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். மலர் பூக்கும் காலத் தொடக்கத்தைத் தங்கள் விழாக் காலத் தொடக்கமாகக் கணக்கிட்டுக்கொள்கிறார்கள். இயற்கையை அடிப்படையாகக் கொண்டு, தங்கள் இறை வழிபாட்டுக் கான காலமாக இந்தப் பூக்களின் வருகை யைக் கணக்கிடுகிறார்கள். இவர்களின் மணவிழாக்களும் குடும்ப விழாக்களும் இந்தக் காலத்தில்தான் நடைபெறுகின்றன.

**ஆனால், இத்தனை சிறப்பு மிக்க குறிஞ்சி பூக்கும் இயற்கை சூழலைப் பாதுகாக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் அரசு எடுக்கவில்லை. தமிழ் மக்களின் ஆதிப் பண்பாட்டின் அடையாளமாகவும் பெருமையாகவும் கருதப்படும் குறிஞ்சி மலர்களை அழிய விடாமல் பாதுகாப்பதும், அதைக் கொண்டாடுவதும் நம் கடமை. நீலகிரியில் கோடை விழாக்கள் நடத்துவதைப் போல குறிஞ்சி மலர் விழாக்களை நடத்துவதும், குறிஞ்சி மலர் பற்றிய தொல் நினைவுகளை உணர்த்தும் வகையில் அருங்காட்சியகம் ஒன்று அமைப்பதும் காலத்தின் தேவை!**

**சி. மகேந்திரன்,**
**ஆசிரியர்**
**தாமரைஇதழ்**

# ரீடேர்ஸ் டயஸ்ற் சஞ்சிகை பற்றி...

**விபத்தால் ஏற்பட்ட விளைவு...**


தமது எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் கட்டுரை அமையாத வரை அதைத் திருத்தி எழுதுவதற்குத் தயங்கமாட்டார். டி விட் வாலஸ் மீண்டும் மீண்டும் திருத்தி எழுதுவது தேவையில்லாத சுமை என்று நினைக்க மாட்டார். பாறங் கல்லைச் செதுக்கிச் செதுக்கி சிற்பத்தை வடிக்கும் சிற்பியின் கை வண்ணமும் பொறுமையும் இந்த எழுத்துச் சிற்பிக்கும் இருந்தது.

1935 ஒகஸ்ட் ரீடேர்ஸ் டையஸ்ற் இதழில் விபத்து பற்றிய கட்டுரை வெளியானது. அவ்வளவு இயல்பாக அதுவரை ஒரு விபத்தை யாரும் விபரித்ததாக இல்லை என்று சொல்லத்தக்க வகையில் அது வெளியாகியிருந்தது. விபத்து என்றாலே கோரம்தான் - திகில்தான். இருந்தாலும் அதையும் அதன் கருத்தைக் கவரும் விதத்தில் கண்ணியமாக வெளியிட முடியும் என்பதை நிரூபித்திருந்தார் டி விட் வாலஸ். கட்டுரைக்கு அவர் கொடுத்திருந்த முகப்பு இன்னும் பெரிய உணர்வலையைத் தூண்டுவதாக இருந்தது.

'மின்னலில் இருந்தும், சூறாவளியில் இருந்தும் , நிலநடுக்கம் , நெருப்பு, வெள்ளம், பிளேக் நோய், கொள்ளை நோய், பஞ்சம், போர், கொலை, உடன் மரணம் போன்றவற்றிலிருந்து ஆண்டவா! எங்களைக் காப்பாற்று..." என்று கட்டுரையைத் தொடங்கியிருந்தார். இது கிறிஸ்தவ மதத்தினர் முக்கியமாகச் சொல்லும் வேண்டுதல் மந்திரத்தின் ஒரு பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. உடன் மரணம் என்பது விபத்தைக் குறிக்கிறது என்பது எவருக்கும் புரியும். இந்தக் கட்டுரைக்கு வாசகர்களிடையே பலத்த வரவேற்பு கண்டு கட்டுரையை 5000 பிரதிகள் எடுக்கும்படி சொன்னார் டி விட் வாலஸ். அவற்றைப் பல்வேறு செய்தி இதழ்களுக்கும், வெளியீட்டுகளுக்கும் அனுப்பி வைக்கச் செய்தார்.

உழைப்போர் வாரம் என்ற கொண்டாட்டம் நெருங்கிக் கொண்டிருந்த நேரம் அது. எத்தனை ஓட்டுநர்களுக்கு இந்தச் செய்தியைக் கொண்டு சென்று சேர்க்கப்பட முடியுமோ அத்தனை பேர்களையும் சென்றடையவேண்டும் என்று விரும்பினார் டி விட் வாலஸ். மறு பதிப்புச் செய்யும் உரிமையையும் வழங்கிப் பிற இதழ்களிலும் இந்தக் கட்டுரையை வெளியிடுமாறு ஏற்பாடு செய்தார். அவரது வேண்டுகோளை செய்தித் தாள்களும், பத்திரிகைகளும் மதிப்பளித்து வரவேற்றன.

அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் இந்தக் கட்டுரை பல வழிகளிலும் வெளியிடப்பட்டது. நாடெங்கும் இதே பேச்சு. பள்ளிப் பிள்ளைகள் விவாதித்தார்கள். வானொலியில் அமர்க்களப்பட்டது. தேவாலயங்களில் வழிபாட்டுக் கூட்டங்களின்போது இதைப் பற்றிப் பேசினார்கள். பெரிய மனிதர்கள் கூடும் விருந்துகளிலும் இதைப் பற்றியே விசாரித்தார்கள். அந்தக் கட்டுரை ஏற்படுத்திய தாக்கம் எத்தகையது என்பதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டைக் கூறலாம். '1935 ஆம் ஆண்டு தொடங்கி ஏறக்குறைய இருபது ஆண்டுகள் வரை அந்தக் கட்டுரையை மறுபதிப்புச் செய்யக்கோரி வேண்டுகோள்கள் வந்த வண்ணம் இருந்தன. எண்ணற்ற பத்திரிகைகள் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றவும் செய்தன. உலகிலேயே அதிக வரவேற்பைப் பெற்றுப் படிக்கப்பட்ட கட்டுரை இது ஒன்றாகத்தான் இருக்க முடியும்"




"ஒரு இதழில் புதிய விடயத்தின் உருவாக்கம் என்பது ஒரு பரீட்சார்த்தமாக இருந்தாலும், தொடங்குவதற்கு முன்பாகத் தன்னைச் சமாதானம் செய்வது பெரிய விடயம். விபத்துக்கள் பற்றி "உடன் மரணங்கள்" என்ற பகுதியை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்காக அவர் தன்னைத் தயாரிப்பதே பெரிய விடயம். அதையே வாசகர்கள் ஏற்கும் வண்ணம் படைப்பது, வடிவமைப்பது என இன்னும் பொறுப்பை அதிகப்படியாக்கியது. அதையும் வெற்றிகரமாகக் கையாண்டிருந்தார் டி விட் வாலஸ்"

– ஆசிரியர்




**விமர்சனம் என்ன?**

டி விட் வாலஸ் பெரிய சாதனையாளர் என்பதையே ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் நிறையவே இருக்கிறார்கள். அவர் என்ன பெரிதாகச் சாதித்து விட்டார்? இன்னும் சொல்லப் போனால் அவரை ஒரு பத்திரிகை ஆசிரியர் என்றே எடுத்துக் கொள்ள முடியாது. ஏற்கனவே வெளியாகி இருக்கும் செய்திகளைக் கத்தரிப்பார். இங்கும் அங்கும் ஒட்டுவார். அதையே ஒரு புதுப்பத்திரிகை என்பார். இது எத்தனை பிரதிகள் விற்கிறது என்று யாருக்குத் தெரியும்? என்கிற விதமாய் டி விட் வாலஸ் விமர்சிக்கப்பட்டார். இது அவர் மேல் மற்றவர்கள் கொண்டிருந்த பொறாமை காரணமாகவே எழுந்தது என்று வாசகர்கள் அறிவார்கள்.

உலகமே விரும்பிப் படிக்கும் பத்திரிகையாக ரீடேர்ஸ் டையஸ்ற் வளர்ந்து வந்ததைச் சகிக்காதவர்கள் கட்டிவிடும் கதைகளை நம்ப எவரும் தயாராக இருக்கவில்லை. மற்றவர்களது படைப்புக்களைத் திருடுகிறவர் என்று குற்றஞ்சாட்டப்படுவது டி விட் வாலஸுக்குப் பிடிக்கவில்லை. தம்மால் முற்றிலும் புதிய படைப்புகளை உருவாக்குவதிலும் மிகப்பெரிய வெற்றியைப் பெறமுடியும் என்பதை விபத்துக் கட்டுரையிலே காட்டியிருந்தார். தொடர்ந்து வந்த இதழ்களிலும் அதேபோன்ற இவரது சொந்தச் சிந்தனையில் உருவான கருத்துக்களை உள்ளடக்கிய கட்டுரைகள் பலவற்றை வெளியிடலானார். பாசிசம், பொதுவுடமைக் கொள்கைகள் பற்றியும் எழுதினார் டி விட் வாலஸ்.

புகை பிடிப்பதால் ஏற்படும் தீமைகளை விளக்கினார். மது அருந்துவதன் கேடுகளை விவரித்தார். மது அருந்தி விட்டுக் காரோட்டுவதால் ஏற்படும் கொடுமைகளைச் சுட்டிக் காட்டினார். போதைப் பொருள் பழக்கத்தை எதிர்த்தார். அரசின் முதலீடுகள் எப்படி வீணடிக்கப் படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டினார். இத்தகைய உண்மை அடிப்படையிலான கட்டுரைகள் ரீடேர்ஸ் டயஸ்ற்றின் உள்ளடக்கத்தில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தன. வாசகர்களின்ஆதரவும் பெருகியது. வெளியில் சொல்லப்படாத இரகசியம். எத்தனை பிரதிகள் விற்கிறது என்பதையே சொல்லாத பத்திரிகை. இதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்கிற விமர்சனம் பல காழ்ப்புணர்வு கொண்டவர்களால் பரப்பப் பட்டு வந்தது. டி விட் வாலஸும் தம்முடைய பத்திரிகை எத்தனை பிரதிகள் விற்பனையாகிறது என்பதைச் சொல்லாமலேயே நீண்ட காலம் நடத்திக் கொண்டிருந்தார். தன்னடக்கம் என்பதே தமக்கு எதிரான பல விளைவுகளை ஏற்படுத்தி விடுமோ என்றும் யோசித்தார். இறுதியில் தமது பத்திரிகையின் பலத்தை வெளியிடத் தீர்மானித்தார்.1936 ஆம் ஆண்டு நவம்பர் போர்ஸ் இதழில் டி விட் வாலஸ் அளித்த விவரங்கள் அச்சில் வெளியாகின. ரீடேர்ஸ் டையஸ்ற்றின் விற்பனை அப்போதைய நிலவரப்படி 18 இலட்சம் பிரதிகள் என்பதை உலகிற்கு அறிவித்திருந்தார் டி விட் வாலஸ். 25 சென்ட் விலை கொண்ட பத்திரிகைகள் என்று எடுத்துக் கொண்டால் வேறு எந்தப் பத்திரிகையுமே இந்த எண்ணிக்கைக்கு அருகில் கூட நெருங்க முடியாமல் இருந்தது. உலக அளவில் இது ஒரு மாபெரும் சாதனை. இத்தனைக்கும் டி விட் வாலஸ் தம்முடைய பத்திரிகையை எந்தவித விளம்பர வருவாயையும் ஏற்றுக் கொள்ளாமலேயே நடத்திக் கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. சட்டைப்பையில் பல்கலைக் கழகம் என்ற அடைமொழியைப் பெற்றிருந்தது ரீடேர்ஸ் டையஸ்ற். 1935 ஆம் ஆண்டில் நிகர லாபமாக 4 லட்சத்துப் பதினெட்டாயிரம் டொலர்களை ஈட்டியிருந்தது. வெற்றிகரமான எழுத்தாளர், பத்திரிகையாளர் என்பதாக மட்டுமல்லாமல் நிதி விடயத்திலும் தாம் ஒரு விற்பன்னர் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டார் டி விட் வாலஸ்.

(தொடரும்)

1947 / 1948 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவுஸ்ரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட லாலா அமர்நாத் தலைமையிலான இந்திய அணி அங்கு 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. அந்தத் தொடரை 4 : 0 என்று அவுஸ்ரேலியா வென்றது. அவுஸ்ரேலியா சார்பில் சேர் டொனால்ட் பிரட்மன் 4 சதங்கள் ஒரு அரைச்சதம் அடங்கலாக 715 ஓட்டங்களைக் குவித்திருந்தார். இந்திய அணிக்கெதிராக சேர் டொனால்ட் பிரட்மன் விளையாடிய ஒரே ஒரு டெஸ்ட் தொடர் இதுவாகும்.




# பொக்கிஷம்

இதை ஏன் இங்கு நினைவுபடுத்துகிறேன் என்றால் சில தினங்களுக்கு முன்னர் கொல்கத்தாவில் இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெற்றது. அதற்கு முதல்நாள் சேர் டொனால்ட் பிரட்மன் இந்திய அணிக்கெதிராக விளையாடியபோது பாவித்த துடுப்பை இந்தத் தொடரில் தொலைக்காட்சி வர்ணனையாளராகக் கடமை புரிந்து வரும் அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவரான மைக்கல் கிளார்க் கொல்கத்தாவில் அமைந்துள்ள கிரிக்கெட் அருங்காட்சியகத்தில் ஒப்படைத்துள்ளார். அவரோடு இந்நிகழ்வில் இந்திய, அவுஸ்ரேலிய அணிகளின் முன்னாள் வீரர்களான தீப் தாஸ் குப்தா மற்றும் பிரட் ஹொக் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

அரிதான விளையாட்டுப் பொருட்களைச் சேகரித்து வரும் மெல்பேரனில் வசிக்கும் நிஹில் டவ்ரரி என்பவர் தன்னிடமிருந்த சேர் டொனால்ட் பிரட்மனின் அந்தத்துடுப்பை மைக்கல் கிளார்க் ஊடாக கொடுத்து அனுப்பி உள்ளார். 52 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6,996 ஓட்டங்களைக் குவித்து 99.94 ஓட்ட சராசரி உடைய சேர் டொனால்ட் பிரட்மன் 2001 ஆம் ஆண்டு தனது 93 ஆவது வயதில் காலமாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் சென்னையில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டிக்காக வருகை தந்த டோனி போட்டி முடிந்த மறுநாள் சென்னையில் உள்ள இந்தியா சிமென்ஸ் நிறுவனத்தின் அலுவலகத்திற்குச் சென்றுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இந்தியா சிமென்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தம் என்பது அறிந்ததுதான்.

ஆனாலும் இந்தியா சிமென்ஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவுக்குத் துணைத் தலைவராக விளங்கும் டோனி அங்கு சென்றமை இதுதான் முதற்தடவை என்று கூறப்படுகின்றது. அங்கு சென்ற டோனி கிட்டத்தட்ட அரைநாளை அங்கேயே கழித்துள்ளார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மீதான தடை நீக்கப் பட்டு அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். போட்டிகளில் அது பங்குபற்ற வுள்ள நிலையில் டோனியின் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இந்தியா சிமென்ஸ் நிர்வாகம் 'சென்னைக்கு வருகை தந்த டோனி இந்தியா சிமென்ஸ் நிறுவனத்தின் அலுவலகத்தைப்

# நேரடி விஜயம்



பார்வையிடவும் உரிமையாளர்களில் ஒருவரான என்.ஸ்ரீனிவாசனைச் சந்திக்கவும் விரும்பினார்' என்று கூறியுள்ளது. அதேசமயம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பணிப்பாளரான ஜோர்ஜ் ஜோன் ' சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு டோனி தேவை என்பதில் எந்தவிதமான இரகசியமும் இல்லை. வீரர்களை மீண்டும் அணியில் சேர்ப்பதற்கான பேச்சில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் ஈடுபட்டு வருகின்றோம். மீண்டும் முன்பு விளையாடிய வீரர்களோடு களமிறங்கவே விரும்புகின்றோம். அவ்வாறு நடந்தால் அணி ஒரு தொடர்ச்சியைக் கொண்டிருக்கும். அதுதான் அணியின் உரிமையாளராக நாம் விரும்பும் விடயம்' எனக் கூறியுள்ளார்.

மெக்சிக்கோ உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரரான ஜாவியர் ஹெர்னாண்டஸ் இங்கிலாந்து பிறீமியர் லீக் போட்டிகளில் வெஸ்ற் ஹம் யுனைற்றட் அணிக்காக விளையாடி வருகின்றார். இரண்டு வாரங்களுக்கு முன்னர்மெக்சிக்கோவில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் 250இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததோடு ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தும் உள்ளனர். இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு வெஸ்ற் ஹம் யுனைற்றட் கழக நிர்வாகம் முன்வந்தது.

அந்தவகையில் வெஸ்ற் ஹம் யுனைற்றட் கழக வீரர்களின் ஜேர்சிகளை ஏலத்தில் விட முடிவு செய்தது.



# உதவும் கரங்க

கடந்தவாரம் அவர்களது மைதானத்தில் நடைபெற்ற ஏலத்தில் அதிக பட்சமாக ஜாவியர் ஹெர்னாண்டஸின் 17 ஆம் இலக்க ஜேர்சி 2501 ஸ்ரேலிங் பவுண்ஸ்களுக்கு ஏலம் போயிருந்தது. பின்னர் இதில் கிடைத்த பணம் முழுவதும் பாதிக்கப்பட்ட மெக்சிக்கோ மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஜாவியர் ஹெர்னாண்டஸ் இந்தக் கடினமான தருணத்தில் ஆதரவு அளித்த வெஸ்ற் ஹம் யுனைற்றட் அணி நிர்வாகத்திற்கும் ரசிகர்களுக்கும் நான் மிகுந்த நன்றி உடையவனாக இருக்கின்றேன் எனக் கூறியுள்ளார்

தொகுப்பு :- சி.விமலன்




தரம் 4 மாணவர்களுக்கான புலமை பரிசில் பரீட்சைக்கான சிங்கள மொழிபெயர்ப்பு
வினாத்தாள் இலவச திருத்தற் சேவையுடன் உங்கள் குடும்ப முன்னேற்றத்துக்கான அனைத்து
ஆக்கங்களையும் தாங்கி இதோ வெளிவந்துவிட்டது செப்டெம்பர் மாத ஒளிஅரசி

தொடர்புக்கு : 0714273035

மருத்துவ உணவு, போட்டி பரீட்சை கையேடுகளும் இலவசம்

ஒளிஅரசி சஞ்சிகையை அனைத்து பத்திரிகை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 30.09.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.